22nd OCTOBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 54 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## எவருடைய அறிக்கைகளையும் நாம் ஏற்க மாட்டோம்

ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துள்ளோம்! பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு!!



2019 உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொதுமக்களை தவறாக

03ம் பக்கம்பார்க்க...

### அல்விஸ் விசாரணை அறிக்கையில் ரவி செனவிரத்ன மீது குற்றச்சாட்டு;

# ஜனாதிபதி அவரை பதவி நீக்க வேண்டும்

### ஈஸ்டர் அறிக்கையை சமர்ப்பித்து கம்மன்பில வலியுறுத்து



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவை பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்று பிவிதுரு ஹெலவுருமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட "ஏ.என்.ஜே. தி. அல்விஸ் " ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கையை பிவிதுரு ஹெலவுருமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்று (21) வெளியிட்டார்.

ஐ.எம்.இமாம் அறிக்கையை அடுத்த வாரம் திங்கட்கிழமை வெளியிடுவேன் என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

02ம் பக்கம்பார்க்க...

## திட்டமிட்டபடி நவம்பர் 14 ல் பொதுத் தேர்தல் நடைபெறுமா?

உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள

02ம் பக்கம்பார்க்க...

### நாம் எதை மறைக்க வேண்டும் யாரைக் காப்பாற்ற வேண்டும்;

# கோமாவிலிருந்து விழித்துக் கொண்டவர்களுக்கு நாம் அடிபணிய மாட்டோம்

### - ஜனாதிபதி அனுர குமார காட்டம்! -



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதியான நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.நாம் எதையும் மறைக்க மாட்டோம்.யாரையும் காப்பாற்றவும் மாட்டோம்.சம்பந்தப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவோம்.அதற்கான பணிப்புரைகள் பொலிஸ் மற்றும் சீ.ஐ.டி யினருக்கு வழங்கப்பட்டுள்ளன. கட்டுநாயக்கவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

03ம் பக்கம்பார்க்க...

# யஹ்யா சின்வரின் கொலையை அடுத்து இஸ்ரேல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### நெருக்கடியில் நெதன்யாகு அரசு

(சிறப்பு நிருபர் எம்.என்.முஹம்மத்)

பலஸ்தீனிய போராட்டம் மிக முக்கிய கட்டங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக ஹமாசினுடைய அரசியல் பிரிவு தலைவர் யஹ்யா சின்வரின் படுகொலையை அடுத்து இந்த

02ம் பக்கம்பார்க்க...







## அல்விஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ.என்.ஜே. தி அல்விஸ் அறிக்கையில், தற்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தமது அரசியல் இலாபத்துக்காகவும் தமது சகாக்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே இவ்விரு அறிக்கைகளையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளியிடாமல் இருக்கிறார்.

அதற்கமைய ரவி செனவிரத்னவை பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பொலிஸ் அதிகாரிகளிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. முக்கியமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது.

எனவே, அதிகாரத்தை சரியாக பயன்படுத்தாமை மற்றும் அறிக்கைகளை மூடி மறைத்தமைக்காக ஜனாதிபதி பொது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வருவோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

## திட்டமிட்டபடி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தல் திகதி தொடர்பில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ள சிவில் அமைப்பு செயற்பாட்டாளர் பிரியந்த ஹேரத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.இத் தினத்தில் பாராளுமன்ற தேர்தலை நடாத்துவது அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறும் இந்த மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி அக்டோபர் 04 முதல் அக்டோபர் 11 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்தின்படி, வேட்புமனு தாக்கல் முடிவடைந்த நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாமலும், ஏழு வாரங்களுக்கு மிகாமலும் தேர்தல் நடைபெறும் திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அதன்படி, வேட்புமனு ஏற்கும் பணி முடிவடைந்த அக்டோபர் 11ஆம் திகதி முதல் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் 14ஆம் திகதி, அந்த சட்டக் காலப்பகுதியில் உள்ளடக்கப்படாததால், அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தவறு குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுவில் கூறப்பட்டுள்ளது.

மக்களின் இறையாண்மை மீறப்படுவதாகவும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாகவும் தீர்ப்பளிக்க வேண்டும் என மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## யஹ்யா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை நாம் வெளியிடும்போது ஜோர்டான் தலைநகரில் பல்கலைக்கழக மாணவர்கள் பலஸ்தீன் விவகாரத்தில் அரபுலகத்தின் கவனத்தினை திருப்ப ஆர்பாட்டங்களை செய்ய ஆரம்பித்து இருக்கின்றனர். ஜப்பானிய செயற்பாட்டாளர்களில் ஒருவர் யஹ்யா சின்வரின் அந்த துணிந்த போராட்டம் அந்த மரணத்தை எதிர்கொண்ட விதம் எதிரிகளுடன் விடாது போராடிய ஒழுங்குகளை அவதானித்து விட்டு அவரை ஜப்பானிய போராட்ட வீரர் சாமுராய் என குறிப்பிட்டுள்ளார். உலகளாவிய அளவில் சிம்மாரின் மரணம் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக யஹ்யா சிம்மார் உலக எதிர்ப்பு இயக்கத்தின் அடையாளமாகவும் விடுதலைப் போராட்டத்தின் அடையாளமாகவும் அவர் கருதப்படுகிறார்.

அவருடைய மரணத்தை அடுத்து ஹமாஸ் இதுவரை ஒரு தலைவரை நியமிக்கவில்லை. அரசியல் பிரிவு தலைவராக அனேகமாக காலித் மிஸாயில் நியமிக்கப்படலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பு காணப்பட்டாலும் பிந்தி கிடைத்த செய்திகளின்படி ஹமாஸ் தன்னுடைய அரசியல் தலைமையை மறைப்பது தொடர்பில் ஆலோசித்து வருவதாக உள்ளிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்னொரு பக்கம் உலக நாடுகளில் ஈரான் இந்த தாக்குதலை கடுமையாக கண்டித்து இருப்பதோடு, ஈரான் யஹ்யா சிம்மாரை விடுதலைப் போராட்டத்தின் அடையாளம் என அறிமுகம் செய்திருக்கிறது. பலஸ்தீன மக்கள் உட்பட உலகளாவிய முஸ்லிம் உம்மத்தின் மக்களை மிகப்பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள இந்த தாக்குதலை பொருத்தமட்டில் அரபு இஸ்லாமிய நாடுகளில் அனேகமானவை எந்த ஒரு கண்டனத்தையும் இதுவரை தெரிவிக்காதது மக்கள் மத்தியில் பல அதிருப்தியை ஏற்படுத்திருப்பதாக அரபுலக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்னொரு பக்கம் யஹ்யா சிம்மாரின் மரணத்துக்கு அடுத்த நாள் ஹிஸ்புல்லாக்கள் மிகத் தெளிவாக இஸ்ரேலிய பிரதமருடைய வீட்டை தாக்கியமே ஒரு மிகப்பெரிய பரபரப்பான நிலைமையாக பார்க்கப்படுகிறது. மிகத் துல்லியமாக இஸ்ரேல் பிரதமர் உடைய வீட்டை தாக்கும் ஆயுதம் ஹிஸ்புல்லாக்களிடம் இருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இது அமையும் எனவும் இஸ்ரேலியினுடைய வான் பாதுகாப்பு திட்டம் தோல்வி அடைந்துள்ளமையை இது எடுத்துக்காட்டுவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இஸ்ரேல் தனது வான் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு விதமான வழிவகைகளை மேற்கொண்டு வருவதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி தெரிவிக்கின்றன. ஈரானை தாக்குவதற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் போட்ட மிகவும் இரகசியமான திட்டம் டெலிகிராம் சேனலில் வெளியானதை அடுத்து தங்களுடைய இரகசியங்கள் இவ்வாறு ஈரானுக்கு வெளியாகுவது என்பது தொடர்பில் அமெரிக்க இஸ்ரேலிய தரப்பு விசாரணை செய்து வருகிறது. இதேவேளை ஈரானிய பல நிறுவனங்கள் மீது தொடரான இணையத் தாக்குதல்கள் ( உலடிநச யவவயஉமள) நடைபெற்று இருக்கின்றது. இப்பொழுது ஈரான் மிகவும் கவனமாக அந்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கான சைபர் தொழில்நுட்பவாளர்களை கொண்டு முன் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வரும் நிலையில், எந்த நேரமும் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் அல்லது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பலத்த சண்டை மூளலாம் என்ற நிலை உருவாகும் நிலையில், எகிப்தினுடைய வெளிவிவகார அமைச்சர் மத்திய கிழக்கு ஒரு மிகப்பெரிய பிராந்திய யுத்தத்தின் விளிம்பில் இருப்பதாக அறிவித்துள்ளார்.

இன்னொரு புறம் ஹிஸ்புல்லாக்கள் இடைவிடாது தொடர்ந்து இஸ்ரேலை தாக்கி வருகின்றது. அந்த தாக்குதலின் விளைவாக இஸ்ரேலினுடைய குறிப்பாக கைபா நகர் நேற்று நடைபெற்ற தாக்குதலில் முற்றாக முடங்கியுள்ளதாகவும் பல இடங்களில் தீப்பற்றி எரிவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் மிகப்பெரிய பாதுகாப்பின்மையை உணர்வதாக இஸ்ரேலிய மக்கள் பல ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள நிலையில், நெதன்யாஹூ நிலைமையை கையாளுவது தொடர்பில் போலியான தகவல்களை வெளியிட்டு வருகின்றார். அடுத்த வாரங்களில் நெதன்யாஹூவுக்கு மிகவும் நெருக்கடியான நிலைமைகள் உருவாக வாய்ப்புள்ளது என பல செய்திகள் தெரிவிக்கின்றன.







தேர்தல் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
070 239 7210

යුක්තියේ හඬ
நீதியின் குரல்
VOICE OF JUSTICE

අසාත් සාලි
அசாத் சாலி
Azath Salley
2

பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்
பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜூலை 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com
Whatsapp / Call:
070 239 7210

## எவருடைய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினகள் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகள் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது,முன்னைய அரசாங்கம் இந்த பரிந்துரைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாங்கள் இந்த இரண்டு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை, தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார், அவர் அதனை நிறைவேற்றுவாரா என கத்தோலிக்க திருச்சபை பார்த்துக்கொண்டிருக்கின்றது

## நாம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கடந்த ஐந்து வருடங்களாக கோமாவில் இருந்தவர்கள் இப்போது தான் விழித்துக் கொண்டுள்ளனர்.இந்த இரண்டு அறிக்கைகளும் ரணில் விக்கிரமசிங்கவினுடையது.

அதனையே இப்போது பகிரங்கப்படுத்து கிறார்கள்.நாம் இதற்கு அடிபணிய மாட்டோம். மாட்டிக் கொள்ளவும் மாட்டோம். துரித விசாரணை நடாத்தப்பட்டு சம்பந்தப்பட்ட சகலருக்கும் தண்டனை வழங்கப்படும்.அதற்காக யாரும் வருத்தப்படவும் வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
Awarded By:
INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English

CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032
AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 OCTOBER 22 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முக்கிய நியமனங்களில்

## இன விகிதாசாரம் பேணப்படுமா?

கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் பிரதான பதவிகளில் ஒன்றுக்கு கூட மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் நியமிக்கப்படாமை குறித்து திருமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் அறிக்கை ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டி உள்ளார். கிழக்கு மாகாண புதிய ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் விஜயசேகர பதவியேற்ற பின் அவரினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களில், மாவட்டத்தில் வாழும் 39 சதவீத முஸ்லிம்கள் சார்பில் ஒரு பிரதிநிதி யாவது நியமிக்கப்படாமல் குறித்து இம்ரான் மஹ்ரூப் சுட்டிக்காட்டியுள்ளதோடு இந்த நடைமுறை மாற்றப்பட்டு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் சார்பிலும் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவது குறித்தும் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். ஆளுநரின் அலுவலகத்தில் முஸ்லிம்களின் அபிலாஷை களையும் தேவைகளையும் புரிந்து நடந்து கொள்வது முக்கியமானதொன்றாகும் என இம்ரான் மஹ்ரூப் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய அரச நிறுவனங்களிலும் முஸ்லிம் பிரதிநிதிகள் மிகச் சிலரே நியமிக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. உண்மையில் அரசால் வழங்கப்படும் நியமனங்களில் போதியளவு முஸ்லிம்கள் உள்வாங்கப்படாமை சமூகத்தின் பாரிய பேசிப் பொருளாக உள்ளது.

கடந்தகாலங்களில்பதவியில்இருந்தஅரசாங்கங்கள் கிழக்கில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை கணக்கில் எடுக்காது நியமனங்களை மேற்கொண்டு வந்தன. இதனால் கிழக்கின் முஸ்லிம்கள் அதிருப்தி அடைந்தனர். புதிய அரசாங்கத்திலும் இந்த நிலைமை தொடர்வது நல்லதல்ல.

பல்கலைக்கழக மானிய ஆணை குழு போன்ற நிறுவனங்களில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் இருப்பது முக்கியமாகும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை.

முன்னைய காலங்களில் பிரதான அரச நிறுவனங்களில் இன சமத்துவம் பேணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அந்தந்த சமூகங்களை சேர்ந்த பிரதிநிதிகளை நியமிக்கும் சம்பிரதாயம் மஹிந்த அரசாங்கத்தின் காலத்திலிருந்து கைவிடப்பட்டது. ஜனாதிபதிஅனுரகுமாரதிசாநாயக்கதலைமையிலான அரசாங்கம் சகல இனங்களையும் மதிக்கும் ஒரு அரசாக இருப்பதினால் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பதை ஒரு சம்பிரதாயமாக கடைபிடிப்பது அவசியமாகும். அதன் மூலம் அந்தந்த சமூகங்களின் அபிலாஷைகளை தவறாது பேணுவதற்கு உதவியாக அமையும்.

# மட்டு. மாவட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு செயலமர்வு







பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புத்தசாசன மத விவகார கலாச்சார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கௌரவ பணிப்பாளர் ஆ.ளு.ஆ. நவாஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி வாழைச்சேனை பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்றது.

இதற்கு சுமார் 150 பள்ளி வாசல்களின் 450 க்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை மற்றும் இலங்கை வக்பு நியாய சபை ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இக் கருத்தரங்கில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக வளவாளர்களாக அதன் உதவிப் பணிப்பாளர் ஆ.ளு. அலா அஹ்மத், வக்பு பிரிவின் அதிகாரி அஷ் ஷேக் ஆ.ஐ. முனீர், வக்பு பிரிவின் பொறுப்பதிகாரி யு.ளு.ஆ. ஜாவித், வக்பு நியாய சபை பதில் செயலாளர் ஆ.டே.ஆ. ரோஸன் ஆகியோரும் மேலும் சிறப்பு வளவாளர்களாக ரிஸ்வி மஜீதி மற்றும் அஷ் ஷேக் நுஸ்ரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இச் செயலமர்வை எதிர்வரும் காலங்களில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் நடாத்த முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்து அதற்கான முன்னெடுப்புகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட வேட்பாளருமான அஸ்லம் ஹாஜியார் உதயம் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்:**

# நாம் ஒன்று பட்டால் இரண்டு பெறலாம்! சமூகம் வெல்ல சந்தர்ப்பம் தாருங்கள்!!

## சிறப்புப் பேட்டியில் அஸ்லம் ஹாஜியார்

*உங்களுடைய அரசியல் பிரவேசம், உங்களுடைய அரசியல் வாழ்க்கை, ஆரம்ப காலத்தில் உங்களுடைய அரசியல் போக்கு எவ்வாறு இருந்தது, தற்போது நீங்கள் எவ்வாறான அரசியலில் உள்வாங்கப்பட்டிருக்கிறீர்கள் என்கின்ற விடயங்களை பகிர்ந்து கொள்ளலாமா..?*

கடந்த 1988 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்தேன். அந்தக் காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் அங்கத்துவம் பெற்று என்னுடைய அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தேன். 1991 ஆம் ஆண்டு பேருவளை பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு ஒரு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டேன். அதைத்தொடர்ந்து 1997 இல் இடம் பெற்ற பிரதேச சபை தேர்தலிலே இரண்டாவது முறையாக மீண்டும் அதே பிரதேச சபையில் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டேன். களுத்துறை மாவட்டத்தில் மற்ற பிரதேச சபைகளை விட அதிகப்படியான வாக்குகளை நான் பெற்றிருந்த போதும் அன்றிருந்த அமைப்பாளர் மறைந்த எதிரி வீர பிரேம ரத்தின தனது விருப்பின் பேரில் என்னை விட வாக்குகள் குறைவாக பெற்றிருந்த ரோகித்த அபய குணவர்த்தன என்பவருக்கு என்னுடைய தவிசாளர் பதவியை வழங்கி, என்னை உப தலைவராக்கிய போதும் நான் துவண்டு விடவில்லை. அன்று மக்கள் ஆதங்கங்களை வெளியிட்ட போதும் நான் அதை ஒரு பிரச்சினையாக மாற்றிக் கொள்ளாமல் ஒரு பெரும்பான்மை சமூகத்தோடு நாங்கள் இணைந்து வாழுகிறவர்கள் என்ற வகையிலும் எதிர்கால அரசியல் வியூகங்களை கருத்தில் கொண்டும் பொறுமை காத்தவனாக எனது பணிகளில் ஈடுபட்டேன். 1999 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் மேல் மாகாண சபையில் போட்டியிட்டு அதில் வெற்றி பெற்று தொடராக 5 வருட காலங்கள் அந்தப் பதவியில் பல சேவைகளை செய்தேன். தொடர்ச்சியாக 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபை தேர்தலிலும் மீண்டும் களமிறங்கி அல்லாஹ்வின் உதவியோடு அதிலும் வெற்றி பெற்றேன். அதன்பின்னர் 2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு அன்று சுமார் 31,000 என்ற அளவில் கணிசமான வாக்குகளை பெற்றிருந்த போதும், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாமையால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்தினுள் நுழைய வாய்ப்பு கிட்டியது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் ஐந்து வருடங்கள் இரண்டு மாதங்களுமான காலப்பகுதியில் தொடர்ந்து மக்களுக்காக என்னாலான பணிகளை ஆற்றி வந்தேன்.

*அரசியல் வாழ்க்கையில் 36 வருடங்களை தாண்டிய நிலையில் உங்களது பணிகள் பற்றி கூறமுடியுமா?*

36 வருடங்களாக மக்கள் தொண்டனாக இருந்து என் அரசியல் பணியை செய்து வந்திருக்கிறேன்.


அதன் தொடர்ச்சியாக இம்முறை நான் பாராளுமன்ற தேர்தலில் டெலிபோன் சின்னம் பதினோராம் இலக்க வேட்பாளராக களமிறங்கி இருக்கிறேன்.

கடந்த கால அரகலய போராட்டங்களுக்கு பிற்பாடு பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் யாவரும் கள்வர்கள், அரசாங்கத்தை சூறையாடியவர்கள் என்ற விமர்சனம் இருந்து வருகிறது. அந்த வகையில் பாராளுமன்றத்துக்கு தகுதியானவர்கள் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் பார்க்கின்ற போது அந்தப் பதவிக்கு முழுத் தகுதியும் உடையவனாகவே நான் என்னை கருதுகிறேன்.

நான் இந்த பாராளுமன்றம் மாத்திரமல்ல என்னுடைய அரசியல் வாழ்க்கையிலும் எனக்காகவென எதையும் சம்பாதித்தது கிடையாது. என்னுடைய சொந்த சொத்துக்களை நான் பல வகைகளில் அரசியலுக்காக இழந்திருப்பவன் என்ற வகையில் என்னை அடுத்தவர்கள் விரல் நீட்டும் அளவுக்கு நான் நடந்து கொண்டதில்லை. நான் மாகாண சபையில் இருக்கும் போதும் பாராளுமன்றத்தில் இருக்கும் போதும் இன மத பேதமின்றி பலருக்கும் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்திருக்கிறேன். மக்களுக்கு மத்தியில் விசுவாசம் நம்பிக்கை போன்ற நற்பண்புகளை வென்ற ஊழலற்ற ஒரு சிறந்த அரசியல் தலைமை என்ற பெயர் எனக்கு எப்போதும் உள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மையினர் சிங்கள மொழி பேசும் பெரும்பான்மையினர் என பாராது பாடசாலைகள், மதஸ்தலங்கள், வீதிகள் மற்றும் அவற்றின் அடிப்படை வசதிகள், நீர் வசதிகள், கால்வாய் முதற்கொண்டு பல வகையிலும் பாரபட்சம் இன்றி உதவிகள் செய்திருக்கிறேன். எனவே என்னுடைய மாவட்டத்திலே பேருவளை தர்கா நகர் பாணந்துறை என மொரட்டுவை பாலம் தொடக்கம் பெந்தரை கங்கை வரையிலான புலத்சிங்கள வரை பரந்த நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் யாவருக்கும் நாடி வருபவர்களுக்கு இல்லையெனாது பல உதவி ஒத்தாசைகளை வழங்கி இருக்கிறேன். வெள்ளப் பிரளயங்களின் போதான நிவாரண உதவிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் என மக்களது இன்ப துன்பங்களில் மத வேறுபாடுகளைத் தாண்டி பங்களித்திருக்கிறேன். அவ்வாறு பலவகையிலும் பின் தங்கிய முஸ்லிம் கிராமங்களில் அவர்களது வாக்கு வங்கியை கருத்தில் கொள்ளாது, தேவைகளை மாத்திரம் கேட்டறிந்து கொண்டு அவர்களுக்கான பல சேவைகளுக்காக செலவு செய்திருக்கிறேன். பாணந்துறையில் உள்ள ஐந்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் தேவையான கட்டிடங்கள், சுற்றுமதில்கள், கணினிகள் அதற்கான திருத்த பணிகள், வாசிகசாலை உபகரணங்கள், தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், பண உதவிகள் என அத்தனை பௌதீக வளங்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பாக்கியம் எனக்கு கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவ்வாறே களுத்துறை மாவட்டத்தில் மகளிர் பாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தமை, முஸ்லிம் ஆண்கள் பாடசாலையில் ஆசிரியர்களுக்கான

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...



**நாம்...**
**(5ம் பக்கத் தொடர்ச்சி)**

விடுதி அமைத்துக் கொடுத்தமை, மதரசாக்கள், பள்ளிவாசல்கள் அமைத்துக் கொடுத்தமை போன்ற பல உட்கட்டமைப்பு வசதிகள் என்னால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று அதனை அண்டியிருக்கிற மக்கோனை பிரதேச பாடசாலைக்கு வாசிகசாலை ஒன்றை அமைத்துக் கொடுத்தமை பிரதேசவாசிகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தமை பேருவளை சீனன்கோட்டை அல்/ஹுமைஸரா பாடசாலைக்கு வாசிகசாலை ஒன்றை ஏற்படுத்தி கொடுத்தமை போன்ற பல சமூக சேவைகளிலும் என்னை நான் ஈடுபடுத்திக் கொண்டேன்.

நான் மாகாண சபையில் இருக்கின்ற காலத்திலே 1250 தையல் இயந்திரங்கள் மற்றும் 1250 துவிச்சக்கர வண்டிகளை மாவட்டம் பூராகவும் பகிர்ந்தளித்துள்ளோம். இளம் யுவதிகள் மற்றும் படித்து முடித்தவர்களுக்கான தையல் வகுப்புகள், சமையல் வகுப்புகளுக்கான ஏற்பாடுகளை மாதர் சங்கம் ஒன்றை அமைத்து அதனூடாக வழங்கியுள்ளோம். பேருவளையில் இருக்கின்ற அத்தனை பாடசாலைகளுக்குமான அனைத்து பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறைகளுக்கான பதிலீடுகள், இடமாற்றங்களை எனது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் எண்ணில் அடங்காத அளவுக்கு செய்து கொடுத்துள்ளேன். இவ்வாறான பணிகளை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நீர் விநியோகம் எட்டாக்கனியாக இருந்த வியங்கல்ல போன்ற பிரதேசங்களில், தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சராக இருந்த காலப்பகுதியில், எமது சிபாரிசின் பேரில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கட்டுமானத்தில் இருக்கின்ற, அளுத்கம-அகலவத்த திட்டத்தின் ஊடாக இடையறாத நீர் வழங்கும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவைகள் எல்லாம் நாம் பாராளுமன்றத்தில் இருக்கும்போது எம்மால் ஆற்றப்பட்ட பணிகளில் சிலதே ஆகும். எதிர்காலத்திலும் இதைவிட மேம்பட்ட முறையில் பணியாற்றுவதற்கான ஆளுமையும், அரசியல் தொடர்புகளும் எமக்கு இருந்த வண்ணம் உள்ளன. இன்னும் சமூகத்தில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் எம்மால் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்நிலையில் அவற்றை திறம்பட செய்வதற்கான மேலும் எஞ்சியிருக்கின்ற பணிகளை செய்து முடிப்பதற்கான அதிகாரத்தை,

மாவட்டத்தின் வாக்காளப் பெருமக்கள் ஒற்றுமைப்பட்டு, எனக்கு வாக்களித்து, தங்களுக்கான அரசியல் பிரதிநிதியாக என்னை தெரிவு செய்வார்கள் என முழுமையாக நம்புகிறேன்.

*இம்முறை தேர்தல் குறித்த உங்கள் பார்வை?*

கடந்த தேர்தலிலே நாடு பூராகவும் பொஹட்டுவ வுக்கு வாக்களித்தனர். களுத்துறை மாவட்டத்தின் ஒட்டுமொத்த 10 ஆசனங்களில் 8 ஐ பொஹட்டுவ கைப்பற்றியது. இரண்டு ஆசனங்கள் எம் வசமான போது, ராஜித சேனாரத்ன மற்றும் குமார வெல்கம இருவரும் உள்ளடங்கலாக 13 பேர் கொண்ட அந்த போட்டியிலே சுமார் 35,000 வாக்குகளை பெற்று ஆறாவது இடத்தினை நான் பிடித்தேன். மக்களின் அபிமானம் வென்றவன் என்ற வகையில் மேலும் மக்களுக்கு என்னாலான வரைக்கும் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

இன்று களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற இரண்டு வேட்பாளர்களும் சந்தேகத்துக்கிடமின்றி வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். மக்கள் ஒற்றுமைப்பட்டால் மாத்திரம் தான் அந்த வாய்ப்பை நழுவாமல் பற்றிக்கொள்ள முடியும். கடந்த காலங்களிலே ஜனாதிபதி தேர்தலில் ஒட்டுமொத்த இளைஞர்களுமாக ஒன்றிணைந்து மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களித்து ஆட்சி பீடம் ஏற்றி இருக்கின்றனர். அது ஒரு ஜனாதிபதி தேர்தல் ஆகையால் முழு நாடுமே ஒரே தொகுதியாக கருதப்பட்டது. ஆனால் நாம் எதிர்கொள்ள இருப்பது பாராளுமன்றத் தேர்தல் இதன் பிரதிநிதித்துவம் உங்கள் பிரதேசங்களுக்கானது. இதன் பிரதிநிதிகள் எங்களுக்கான சேவைகளை செய்யக்கூடிய எங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய எந்த நேரமும் நாங்கள் சென்று பேசக்கூடியவர்களாக தெரிவு செய்ய வேண்டியது எமது கடமையாகும்.

இதுவரை காலமும் நாங்கள் சேவை செய்திருக்கிறோம் செய்தவற்றை சுட்டிக்காட்டியே உங்கள் வாக்குகளை கேட்கின்றோம். சுமார் 25 வருடங்களாக மக்கள் பிரதிநிதியாக பணியாற்றிய அரசியல் அனுபவம் மிக்கவன் என்ற வகையிலும், மாகாண சபை பாராளுமன்றம் என பல அரசியல் தலைமைகளுடனும் இணைந்து பணியாற்றிய ஆளுமை மிக்கவன் என்ற வகையிலும் நான் கேட்பதெல்லாம் எமது மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். பௌத்த, முஸ்லிம் மற்றும் இந்து மக்கள் யாவரும் எனது வெற்றியில் பங்கு கொள்ள வேண்டும்.

*ஒப்பீட்டளவில் பரந்த ஒரு தொகுதியாக காணப்படும் களுத்துறை மாவட்டத்தில் வேட்பாளர்களுக்கிடையில் பாரிய போட்டி நிலவும் ஒருஅரசியல் சூழலும் காணப்படுகிறது. உங்களது வாக்கு வங்கிக்கு ஏற்படும் இந்த சவால் பற்றிய உங்களது பார்வை என்ன?*

மக்களை திசை திருப்பி, திசைகாட்டி ஆட்சி பீடம் ஏறி இருக்கிற இந்த காலப்பகுதியில், நாம் எதிர் நோக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் உண்மையிலேயே எமது வாக்கு வங்கிக்கு ஒரு சவால் உள்ளது.

எத்தனையோ சுயேச்சை குழுக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் புதிதாக வந்த அரசியல் கட்சிகள் சார்பில் என அனைவரும் ஆட்களை இட்டு வேடமனுக்களை நிரப்பி உள்ளனர். இவைகள் எல்லாம் இந்த களுத்துறை மாவட்ட மக்களின் வாக்குகளை சிதறடிக்க கூடிய முயற்சிகளே ஆகும். தங்களுக்கு தேவையான பணிகளை செய்வதற்கென தங்களுக்கான அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்யும்போது மக்கள் நன்றாக சிந்திக்க வேண்டும். வாக்குகளை சிதறடிக்க எத்தனை குழுக்கள் இருந்தாலும், இந்த நேரத்தில் வாக்காளர்களிடம் நாங்கள் கூறுவதெல்லாம், இது எங்களுக்கான பிரதிநிதித்துவம், எங்கள் மாவட்டத்துக்கான பிரதிநிதித்துவம். எம் கையில் இருக்கும் வாக்கு என்கிற பலம் நாங்கள் அணுகக்கூடிய, எங்களுக்காக பாடுபடக்கூடிய, எம் மீது கரிசனை காட்டக்கூடிய ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வதற்கே பயன்படுத்தப்பட வேண்டும். சமூகமாக ஒற்றுமைப்படுவதன் மூலம் மாத்திரமே இந்த சவால்களை முறியடித்து எமக்கான பிரதிநிதித்துவத்தை நாம் வென்றெடுக்க முடியும்.

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி 9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தை வெற்றி கொண்டு வரலாறு படைத்தது நியூஸிலாந்து



**(அரபாத் பஹுர்தீன்)**

9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் பலமிக்க தென்னாபிரிக்க மகளிர் அணியை அமிலியா கெர்ரின் சகலதுறை அசத்திலின் மூலம் 32 ஓட்டங்களால் வீழ்த்திய நியூஸிலாந்து மகளிர் அணி முதல் முறையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கி வரலாறு படைத்தது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றுவரும் 9ஆவது மகளிர் ரி20 போட்டித் தொடரில் 10 அணிகள் பங்கேற்றிருக்க முதல் சுற்று லீக் ஆட்டம் முடிவில் குழு ஏ இல் இருந்து அவுஸ்திரேலிய மற்றும் நியூஸிலாந்து அணிகளும்இ குழு பீ இல் இருந்து மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்க அணிகளும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

அதற்கமைய முதல் அரையிறுதிப் போட்டியில் குழு ஏ இல் முதலிடம்பிடித்த நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியும் இ குழு பீ இல் 2ஆம் இடம்பிடித்த தென்னாபிரிக்க அணியும் மோதிக்கொள்ள அதில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது தென்னாபிரிக்க அணி.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் குழு பீ இல் முதலிடம்பிடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியும், குழு ஏ இல் 2ஆம் இடம்பிடித்த நியூஸிலாந்து அணியும் பலப்பரீட்சை நடாத்த அப்போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் தடம் பதித்து அசத்தியது.

அதற்கமைய இதுவரையில் மகளிர் உலகக்கிண்ணத்தை வெற்றி கொள்ளாத இரு அணிகளான தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து மகளிர் அணிகள் 9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் (20) இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு டுபாயில் மோதியது. கிரிக்கெட் உலகம் எதிர்பார்த்துக் காத்திருந்த இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை நியூஸிலாந்து அணிக்கு வழங்கியது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு அமேலியா கெர் 43 ஓட்டங்களையும், புரூக்கி ஹெலிடே 38 ஓட்டங்களையும், சுசி பெடர்ஸ் 32 ஓட்டங்களையும் விரைவாகப் பெற்றுக் கொடுக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் நொன்குலுலுகோ 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பின்னர் நியூஸிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 159 ஓட்டங்களைப் பெற்றார் உலகச் சம்பியன் மகுடம் என்ற நிலையில் பதிலுக்கு களம் நுழைந்த தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீராங்கனைகளான லவுரா வெல்வோர்ட் மற்றும் டஸ்மின் பிரிட்ஸ் ஆகியோர் அரைச்சதம் கடந்த இணைப்பாட்டத்தை பெற்றுக் கொடுத்தனர். இதில் லவுரா வெல்வோர்ட் 33 ஓட்டங்களுடனும், பிரிட்ஸ் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, பின்னர் வந்த வீராங்கனைகள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பி ஏமாற்றம் கொடுத்தனர்.

இதனால் ஓட்டங்களை பெற்றுக் கொள்ள தடுமாறிப் போன தென்னாபிரிக்கா மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை பறிகொடுத்து 126 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதனால் நியூஸிலாந்து அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் 9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தை முதன் முறையாக வெற்றி கொண்டு வரலாறு படைத்தது. பந்துவீச்சில் அமிலியா கெர் மற்றும் ரொஸ்மெரி மெய்ர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் அள்ளிச் சுருட்டினர்.போட்டியின் நாயகியாக துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் அசத்திய அமிலியா கெர் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.




# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### உலோபியும் ஈகையாளனும்

(உம்முடைய பொருள்களில் ஒன்றையுமே செலவு செய்யாது) உம்முடைய கையைக் கழுத்தில் மாட்டிக் கொள்ளாதீர். அன்றி (உம்மிடம் இருப்பதை எல்லாம் கொடுத்து) உம்முடைய கையை முற்றிலும் விரித்தும் விடாதீர். அதனால் நீர் முற்றிலும் நிந்திக்கப்பட்டவராகவும் முடக்கப்பட்டவராகவும் தங்கிவிடுவீர்" (17:29)

### தகுதிக்குத் தக்கவாறு

"நிச்சயமாக உம் இறைவன் தான் விரும்பியவர்களுக்கு விரிவாகக் கொடுக்கின்றான். (தான் விரும்பியவர்களுக்குச் சுருக்கிக் குறைத்தும்) அளவாகவும் கொடுக்கிறான். ஏனென்றால் நிச்சயமாக அவன் தன் அடியார் (களின் தன்மைக)ளை நன்கறிந்தவனாகவும், உற்று நோக்கினவனாகவும் இருக்கின்றான். (ஆதலால்) ஒவ்வொருவரின் தகுதிக்குத் தக்கவாறும் கொடுக்கிறான்." (17:30)

### தரித்திரத்திற்குப் பயப்படல்

"(மனிதர்களே) நீங்கள் தரித்திரத்திற்குப் பயந்து உங்கள் குழந்தைகளை கொலை செய்து விடாதீர்கள். நாம் அவர்களுக்கும் உணவளிப்போம் உங்களுக்கும் (அளிப்போம்) அவர்களைக் கொலை செய்வது நிச்சயமாக (அடாத) பெரும் பாவமாகும்" (17:31)

### விபசாரம்

"(விசுவாசிகளே) நீங்கள் விபசாரத்துக்கு நெருங்கவும் வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக அது மானக் கேடானதாகவும் தீய வழியாகவும் இருக்கிறது." (17:32)

### அனாதைகளின் சொத்து

"(விசுவாசிகளே) அனாதைக் குழந்தைகள் வாலிபத்தையடையும் வரையில் அவர்களுடைய பொருளுக்குப் பாதுகாவலராக இருக்கும் நீங்கள் நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள். (உங்கள்) வாக்குறுதியை நீங்கள் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால் (மறுமையில்) வாக்குறுதியைப் பற்றி உங்களிடம் நிச்சயமாகக் கேட்கப்படும்"" (17:34)

### துன்புறுத்தலுக்குப் பதிலும், சகித்தலும்

"(விசுவாசிகளே! உங்களைத் துன்புறுத்திய எவரையும்) நீங்கள் பதிலுக்குப் பதிலாய் துன்புறுத்தக் கருதினால், உங்களை அவர்கள் துன்புறுத்திய அளவே அவர்களை நீங்கள் துன்புறுத்துங்கள். (அதற்கு அதிகமாகவன்று. தவிர, உங்களைத் துன்புறுத்தியதை) நீங்கள் பொறுத்துச் (சகித்துக்) கொண்டாலோ, அது சகித்துக் கொள்வோருக்கு மிக்க நன்றே." (16:126)

"நிச்சயமாக எவர்கள் (மெய்யாகவே) பயபக்தியுடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடனும், எவர்கள் பிறருக்கு நன்றி செய்கிறார்களோ அவர்களுடனும்தான் அல்லாஹ் இருக்கின்றான்."" (16:128)

### நேரான வழிகாட்டி எது?

"நிச்சயமாக இந்தக் குர்ஆன் (மனிதர்களுக்குத் தெளிவான) மிக நேரான வழியை அறிவிக்கின்றது அன்றி விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்வோருக்கு நிச்சயமாகப் பெரும் கூலி உண்டு என்றும் நன்மாராயங் கூறுகின்றது."
(17:09)


### ஒருவனின் பாவச் சுமையை மற்றவன் சுமப்பானா?

"எவன் நேரான வழியில் செல்கிறானோ அவன், தன்னுடைய நன்மைக்காகவே நேரான வழியில் செல்கின்றான். எவன் தவறான வழியில் செல்கிறானோ அவன் (தவறான வழியில் சென்று) தனக்கே தீங்கிழைத்துக் கொள்கிறான். ஒருவனுடைய பாவச் சுமையை மற்றொருவன் சுமக்க மாட்டான். (அச்சமூட்டி எச்சரிக்கக்கூடிய நம்முடைய) தூதரை அனுப்பாதவரையில் நாம் (எவரையும்) வேதனை செய்வதில்லை.
(17:15)

### பதவியிலும் கௌரவத்திலும் மேன்மையானது எது?

"எவர்கள் மறுமையை விரும்பி அதற்காகப் பெரும் பிரயாசையும் எடுத்துக் கொண்டு, விசுவாசம் கொண்டுமிருக்கிறார்களோ!

அத்தகையோரின் செயல்கள் அல்லாஹ்விடத்தில் மிக்க அன்பாக அங்கீகரிக்கப்படும்." (17:19)






# கனடா - இந்தியா உறவில் விரிசல்...



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அண்மையில் சில மாதங்களாகவே இந்தியா மற்றும் கனடா இடையேயான மோதல் அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச நாடுகள் இதனைத் உன்னிப்பாக கவனித்து வருகின்றது என்பது தான் உண்மை. காலிஸ்தான் ஆதரவு தலைவர் படுகொலைக்கு இந்திய முகவர்கள் காரணம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டுகள் அபத்தமானவை என்றும் அரசியல் நோக்கம் கொண்டவை என்றும் இந்தியா நிராகரித்துள்ளது. சில மாதங்களுக்கு முன் காலிஸ்தான் ஆதரவு நபர் கனடாவில் வைத்து கொள்ளப்பட்ட நிலையில் தற்போது வரை இந்த முறுகல் தொடருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், உயர்மட்ட அளவிலான மோதல்கள் இருந்தாலும், தங்கள் அன்றாட வாழ்க்கையில் உடனடி தாக்கத்தை உணரவில்லை என, கனடாவில் வசிக்கும் இந்தியர்கள் கூறுகின்றனர். அதாவது நாங்கள் எப்போதும் போலவே இங்கு வாழ்ந்து வருவதாக அவர்கள் கூறினார்கள். அதேநேரத்தில் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களில் இருந்து திறன் மிக்க தொழிலாளர்கள் வரை, பெரும்பாலானவர்கள் இந்த நெருக்கடியை இரு அரசுகளுக்கு இடையிலான ஒரு விஷயமாகவே பார்க்கிறார்கள். அதாவது தொழில் மற்றும் கல்வி நிமித்தம் அங்கு புலம் பெயர்ந்த இந்திய சமூகம் ”கனடாவில் சில நிச்சயமற்ற தன்மை உள்ளதை மறைக்கவில்லை மாறாக ஒப்புக் கொள்கிறார்கள் என்பதே உண்மையாகும்., ஆனால் நாங்கள் எந்தப் பிரச்னையையும் எதிர்கொள்ளவில்லை” என்று இந்திய சமூகம் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

கனடாவின் தொழிலாளர் மற்றும் குடியேற்ற தேவைகளில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது. இரு நாடுகளும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நெருக்கமாக இருப்பதால் நீண்டகால பதற்றம் நிலவ வாய்ப்பில்லை என்று குடியேற்ற நிபுணர்கள் நம்புகின்றனர்.

கனடாவின் தொழிலாளர் மற்றும் குடியேற்ற தேவைகளில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது. இரு நாடுகளும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நெருக்கமாக இருப்பதால் நீண்டகால பதற்றம் நிலவ வாய்ப்பில்லை என்று குடியேற்ற நிபுணர்கள் நம்புகின்றனர். இந்தியா வழிச் சமூகம் கனடாவில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகப் பெரிய அளவில் ஆன பங்கினை வகிப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

ஆனால், ஒரு நிச்சயமற்ற தன்மை குறித்த பயம் எழுந்திருப்பதாகவும் நிரந்தரக் குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கனடா வந்த நிறைய இந்தியர்களிடம் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற பயம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசியல் ரீதியான இரண்டு நாட்டின் தலைவர்கள் முரண்பாடு கொள்ளும் நிலையில் அரசின் கொள்கை திட்டங்கள் மாறுவது எல்லா நாடுகளிலும் ஏற்படுவதுண்டு. அதே போல் ஒரு நிலையை தான் கனடா மற்றும் இந்திய அரசுகளுக்கு இணையான மோதலாக தற்போது வெடித்துள்ளது என்பதை நாம் முதலில் தெளிவாக உள்வாங்கி கொள்ள வேண்டும்.

தூதரக ரீதியிலான சர்ச்சையைத் தொடர்ந்து இந்தியாவுக்கான கனடா தூதர் உட்பட தூதரக அதிகாரிகளை இந்தியா திரும்ப அழைத்துக் கொண்டது முக்கியமான நகர்வாகப் பார்க்கப்படுகிறது.இந்த உடனடியான பிரச்னைக்கு காரணம், காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர்களில் ஒருவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர் கொல்லப்பட்டது குறித்து கனடாவில் தொடர்ந்து வரும் விசாரணை. அதனைத் தொடர்ந்து டெல்லியில் உள்ள கனடா தூதரக அதிகாரிகள் நீக்கம் ஆகியவையாகும்.ட்ரூடோ நிர்வாகம், இந்திய தூதரக அதிகாரிகள் குற்றத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று விசாரணையில் தெரியவந்திருப்பதாக கூறுகிறது. இந்த சூழல்தான் இந்தியா–கனடா உறவு இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு பின்னடைவை உண்டாக்கி இருக்கிறது. வரும் ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையேயான தூதரக உறவுகள் மோசமடையக்கூடும் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

இந்திய பிரிவினைவாதியான பஞ்சாப் மாநிலத்தின் சீக்கிய தனிநாடு காலிஸ்தான் இயக்கத்தின் முகமாக பார்க்கப்படும் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற கனடாவின் குற்றச்சாட்டுதான் இந்த பிரச்னையின் மையமாகும்.

எனினும், இந்த குற்றச்சாட்டை இந்தியா தொடர்ந்து மறுத்து வருகிறது. கனடா தாம் கூறும் குற்றசாட்டுக்கு வலுவான ஆதாரங்களை இன்னும் கொடுக்கவில்லை என்று இந்தியா கூறுகிறது. அது போன்ற ஆதாரம் இருக்கும் பட்சத்தில் தூதரக மட்டத்திலான தொடர்புகள் மூலம் இந்தியாவிடம் பகிரப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது. குறிப்பாக கனடாவின் உள்நாட்டு அரசியல் சிக்கலாக இருக்கும் சூழலில் அதற்கு மாறாக பொது வெளியில் கனடா, இந்தியா மீது குற்றம் சாட்டியது கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் நோக்கத்தை கேள்விக்கு உள்ளாக்குவதாக உள்ளது என்று இந்திய ஆதரவு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் பஞ்சாப்பில் பலதசாப்தங்களுக்கு முன்பு காலிஸ்தான் இயக்கத்தின் தாக்கம் குறைந்து வந்த நிலையிலும், கனடாவின் அரசியல் வட்டாரத்தில் தொடர்ந்து உயிர்ப்புடனே இருக்கிறது. சீக்கிய சமூகத்தின் சில பிரிவினர் தொடர்ந்து பிரிவினைவாத நோக்கங்களை முன்னெடுத்து வருகின்றனர். இப்போது ஏன் இந்த விஷயம் பெரிதாக்கப்படுகிறது என்ற கேள்வி இதன் பின்னணியில் எழுகிறது. கனடாவின் உள்நாட்டு அரசியல் இதன் பின்னணியில் இருக்கிறது என்பதுதான் இதன் பதிலாக இருக்கக்கூடும். ட்ரூடோவின் லிபரல் அரசு, புதிய ஜனநாய கட்சியின் ஆதரவை சார்ந்தே இருக்கிறது. இது ஜக்மீத் சிங் தலைமையிலான அரசியல் கட்சியாகும். இவர் காலிஸ்தான் அமைப்பின் ஆதரவாளர் ஆவார். இந்த விஷயத்தில் இந்தியாவுக்கு எதிராக அவர் குரல் கொடுத்து வருகிறார். ட்ரூடோவின் அரசு, பதவியில் நீடித்திருக்க புதிய ஜனநாய கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுத்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. இந்திய வம்சாவளி சீக்கியர்களுக்கு ஆதாரவாக எடுக்கப்பட்ட நிலை தான் அதுவாகும்.தற்போதைய தூதரக சிக்கல்களை புரிந்து கொள்ள, கனடாவின் அரசியலை அவசியம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி, 2015ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியில் இருந்து வந்து வந்த போதிலும், ஆட்சியில் நிலைத்திருக்க தொடர்ந்து போராடி வருகிறது. அவரது அரசு இப்போது நாடாளுமன்றத்தில் 150 இடங்களுக்கும் அதிகமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. பியர் போய்லிவெரே தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி அவருக்கு சவாலாக திகழ்கிறது. 2025ஆம் ஆண்டு கனடாவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கருத்து கணிப்புகளில் லிபரல் கட்சியை விடவும் கன்சர்வேட்டிவ் கட்சி முன்னணியில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் ட்ரூடோ தமது அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்த வேண்டிய அழுத்தத்தில் உள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் புகழ் மங்கத் தொடங்கியதற்கு மூன்று விஷயங்கள் காரணமாக இருக்கின்றன என்று இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக குடியேற்றங்கள், ஆட்சிக்கு எதிரான அலை, அடையாளம் மற்றும் பணவீக்கம் ஆகியவை காரணமாக அவரது ஆட்சி செல்வாக்கை இழந்து வருகிறது. பணவீக்கம் அதிகரித்து வருவது அவரது அரசின் மீதான பொருளாதார நம்பகத்தன்மையை மிகவும் பாதித்திருக்கிறது. விதிமுறைகளுக்கு உட்படுத்தப்படாத குடியேற்றங்கள் கனடாவின் மாற்றமடையும் மக்கள் தொகை எண்ணிக்கையில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில் கனடா குடியேற்ற கொள்கையில் திறந்த மனதோடு கூடியதாக இருந்தது. இப்போதைய அரசியல் சூழலில் இது நீண்டகாலத்துக்கு நீடித்திருக்காது. இந்த உள்ளூர் சிக்கலை திசை திருப்புவதற்காக சர்வதேச சர்ச்சைகளை கையில் எடுத்திருக்கும் ஜஸ்டின் ட்ரூடோவின் முயற்சியானது, அவரது அரசியல் வாழ்க்கையை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலானதாக இருக்கலாம் என்று கருத்துக்களை இந்திய ஆதரவு ஊடகங்கள் பகிர்ந்து வருகின்றனர்..

கனடா காலிஸ்தான் இயக்கத்தின் தளமாக கனடா நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்தியாவின் புலம்பெயர்ந்த சீக்கியர்கள் குறிப்பிடத்தக்க அரசியல் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றனர். இந்த தாக்கமானது, பிரிவினைவாத நோக்கங்களுக்கு அங்கீகாரத்தை முன்னெடுத்தல், அரசியல் பிரநிதித்துவத்தை அடைதல், கனடாவின் சமூகத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றை கொண்டிருப்பதாக உள்ளது என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையில் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கூறியதற்கான ஆதாரம் இல்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ திடீரென பல்டி அடித்த நிலையில், இது மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை (உயளயடநைச யவவவைரனந) என்று இந்தியா தற்போது கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய மத்திய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ”இன்று நாங்கள் கேள்விபட்டவை எல்லாம் நாங்கள் தொடர்ந்து பேசி வந்ததை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. இந்தியா மற்றும் இந்திய தூதர்களுக்கு எதிராக தான் வைத்த கடுமையான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் கனடா எங்களிடம் (இந்தியாவிடம்) அளிக்கவில்லை. இந்தியா – கனடா இடையேயான உறவுகளின் இந்த ஏற்றுக்கொள்ளமுடியாத (உயளயடநைச யவவவைரனந) நடத்தை ஏற்படுத்திய சேதத்துக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மட்டுமே பொறுப்பு” என்று தெரிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அரசினை விமர்சிப்பவர்களை கனாடவில் மவுனமாக்கும் செயல்களில் இந்திய அரசின் தொடர்பு இருக்கிறது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியிருந்தார். இந்நிலையில், இது தொடர்பான ஆணையத்தின் முன்பு ஆஜராகி விளக்கம் அளித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங், கனடா மண்ணில் கொல்லப்பட்டதில் இந்தியாவின் தொடர்பு குறித்து தனது அரசின் உளவுத்துறை மூலம் கிடைத்த ஊகங்களைத் தவிர ஆதராங்களை வழங்கவில்லை என்று ஒப்புக்கொண்டார்.

முன்னதாக, இந்த விவகாரம் குறித்து விசாரிக்குமாறு இந்தியாவை கனடா கேட்டுக்கொண்ட போது, அதற்கான ஆதாரங்களை இந்தியா கேட்டது. அந்த நேரத்தில் அது உளவுத்துறையின் முதன்மை ஊகம் மட்டுமே, அதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என்று கூறியிருந்தார்.

காலிஸ்தான் விவகாரம் கடந்தகால யுகத்தின் தொடர்ச்சி என்பது ஒரு முரணாக இருக்கலாம். பஞ்சாப்பில் உள்ள இளம் சீக்கியர்களுக்கு இது பெரும்பாலும் தொடர்பில்லாததாக இருக்கலாம். அதில் இருந்து அவர்கள் நகர்ந்து விட்டனர். எனினும், கனடாவில் இந்த விவகாரம் உயிர்ப்புடன் வைக்கப்பட்டிருக்கிறது. ஜக்மீத் சிங் போன்ற அரசியல்வாதிகள் புலம்பெயர்ந்த சீக்கியர்களின் ஓட்டுகளை பெறுவதற்காக இந்த விஷயத்தை பெரிதுபடுத்துகின்றனர் என்று இந்தியா கருதுகின்றது.

அதே நேரத்தில் ஜஸ்டின் ட்ரூடோ அரசு இதன் தீவிரத்தை உணர்ந்தே இருக்கிறது. எனவே, இந்தியாவுடனான உறவை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதை விடவும் உள்ளூர் அரசியல் கருத்தியல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விரும்புகிறார் என இந்திய ஆதரவு கருத்தாளர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாக லிபரல் கட்சி இந்தியாவுடனான உறவை அபாயத்துக்கு உள்ளாக்குவது மட்டுமின்றி, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் முக்கியமான கூட்டாண்மையின் நட்புணர்வில் அபாயத்தையும் முன்னெடுப்பதாக இருக்கிறது.இந்திய இறையாண்மையின் மீது நேரடி தாக்குதல் என்று இந்தியா கருதுகிறது.

இறையாண்மை எனும் விஷயம் இந்த சிக்கலின் மையமாக இருக்கிறது. உலகின் சக்தியாக வளர்ந்து வரும் இந்தியா உலக அரங்கில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்து வரும் நிலையில், அதன் உள்நாட்டு விவகாரங்களில், குறிப்பாக பிரிவினைவாதத்தில் எந்த ஒரு வெளிநாட்டின் தலையீட்டையும் விரும்பவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதம் முன்னெடுக்கப்படுவது இந்தியாவின் இறையாண்மையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படுகிறது. நிஜ்ஜார் கொலை தொடர்பான விஷயத்தில் மட்டுமின்றி, இந்தியாவின் உள்நாட்டு ஒற்றுமையை சீர்குலைக்கும் யார் ஒருவருக்கும் எந்த ஒரு நாடும், எந்த ஒரு தொலைவில் இருந்தபோதிலும், ஆதரவு அளிக்கக் கூடாது என்ற தெளிவான செய்தியையே இந்தியா மீண்டும் சொல்கிறது.காலிஸ்தான் அமைப்பினரை கனடா சுதந்திரமாக உலவ விடுவது, சர்வதேச அரங்கில் அதன் நிலையை சமரசத்துக்கு உள்ளாக்குவதாகும். இந்தியாவுடனான உறவில் சீர்குலைவு என்பது நீண்டகாலத்துக்கு விளைவுகளை ஏற்படுத்தும் காரணியைக் கொண்டதாகும். குறிப்பாக கனடா சிக்கலான சர்வதேச சூழலில் இந்த கடினமான நிலையை திறம்பட சமாளிக்க வேண்டிய தேவை இருக்கிறது. நாட்டின் வெளியுறவு கொள்கையை வடிவமைப்பதில் உள்ளூர் அரசியல் முக்கிய பங்கு வகிக்கும் போது, கனடா இதை ஒரு புதிய உச்சநிலைக்கு கொண்டு சென்றுள்ளது.ட்ரூடோவின் நடவடிக்கைகள் தூதரக உறவில் தீவிரமான பிளவை ஏற்படுத்துவதை முன்னோக்கியதாக உள்ளது. இந்தியா–கனடா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஒத்துழைப்புக்கான வாய்ப்பு என்பது குறைவாகவே உள்ளது. கனடாவின் தவறான கண்ணோட்டம் சர்வதேச தெற்கு பிராந்தியம், இந்தோ–பசிபிக் பிராந்தியம் ஆகியவற்றில் முக்கியமான நாடாக இருக்கும் இந்தியாவை கோபப்படுத்துகிறது. இது சரி செய்யமுடியாத பாதிப்பை நோக்கி இட்டுச் செல்லலாம்.சீனாவுடனான அதன் உறவு ஏற்கனவே சிக்கலாக உள்ளது. இதையெல்லாம் பார்க்கும் போது கனடா ஆசிய உறவை இழக்க நேரிடலாம்.ட்ரூடோ 2025ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்கிறார். அதில் அவர் வெற்றி பெறுகிறார் அல்லது தோற்கிறார் என்பது கேள்வி அல்ல. தீவிரவாதத்தை கைகழுவி விட்டு மீண்டு வருவாரா என்பதில் என்னவிதமான மரபை தமக்கு பின்னால் விட்டு செல்ல உள்ளார் என்பதில்தான் கேள்வி அடங்கி இருக்கிறது. இந்தியா–கனடா இடையேயான உறவின் மோசமான நிலையை சீர் செய்வது சிக்கலான ஒன்றாக இருக்கும். பல ஆண்டுகளாக வேகமாக கட்டமைக்கப்பட்ட இது இப்போது தரைதட்டி நிற்கிறது.



# அனுபவம் வாய்ந்தவர்களையே பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்

## ஐ.ம.சக்தி கண்டி வேட்பாளர் ஹலீம் கோரிக்கை

(மாவத்தகம நிருபர்)

அரசியல் துறை என்பது ஒரு வித்தியாசமானவையாகும். இன்றைய கால சூழலில் மக்களுடன் சேர்ந்து வாழக் கூடிய மக்கள் பிரச்சினைகளை நன்கு அறிந்த அனுபவம் வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளையே மக்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும் என்று கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான எம் எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்...

மக்களின் உணர்வுகளை நன்கு மதிக்கக் கூடிய மக்கள் பிரதிகளையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைய கால கட்டத்தில் பாராளுமன்றத்திற்காக போட்டியிடுகின்ற உறுப்பினர்களில் அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே கட்டாயத் தேவையாக இருந்து கொண்டிருக்கின்றன. இன்று பல கட்சிகள் பல புதிய முகங்களை அறிகமுப்படுத்தியிருந்தாலும் கூட அவர்கள் மக்களிடத்திலே பரீட்சயமான முகங்களாக நாங்கள் காணவில்லை.

இன்று நாடு பலவிதமான பிரிச்சனைகளை எதிர்நோக்கியிருக்கின்ற தருணத்தில் நீண்ட காலம் அரசியல் அனுபவம் வாய்ந்த பழுத்த பாராமன்ற உறுப்பினர்கள் இன்று பாராளுமன்றத்திற்கு தேவை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் எனவே கண்டி மாவட்ட வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் இந்த தேர்தலில் மிகவும் புத்திசாதுரியத்துடன் மிகவும் கரிசனையோடு சிந்தித்து வாக்களிக்க வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். இந்த தேர்தலைப் பொறுத்தவரையில் எமது சமுகத்தைச் சார்ந்த இருவர் போட்டியிடுகின்றோம். இந்த



தேர்தலில் நானும் முன்னாள் அமைச்சர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றோம். எமது சமூகத்திலுள்ள மக்கள் இந்தத் தேர்தலை மிகவும் அதாவனத்துடன் கையாண்டு முஸ்லிம்களுடைய பிரதிநித்துவங்களைப் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

# தெல்தோட்டையில் இலவச கண் சத்திர சிகிச்சை

(ரஷீத் எம். றியாழ்)

கண்டி மாவட்டத்தில் நீண்ட காலமாக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் தெல்தோட்டை சல்மியா நலன்புரிச் சங்கம் இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான இலவச கண் பரிசோதனைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ம் திகதி தெல்தோட்டையில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தலைவர்: ஏ.ஆர். கன்சூல் கரீமுடன் சல்மியா நலன்புரிச் சங்கம் 0779566678

# ஒரு கோடி 24 இலட்சத்துக்கும் மேல் டெண்டர் போன இறைச்சிக்கடை

(ரஷீத் எம். றியாழ்)

பிரதேச சபைகளூடாக 2025 ஆம் ஆண்டுக்காக டெண்டர் கோரப்படும் மாட்டிறைச்சிக் கடைகளில் ஒரு கோடி 24 இலட்சத்து 75ஆயிரம் ரூபாவுக்கு டெண்டர் மூலம் இறைச்சிக் கடை ஒன்றைப் பெற்றுக்கொண்ட சம்பவமொன்று மொனராகலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மொனராகலை பிரதேச சபையினால் கோரப்பட்ட இந்த இறைச்சிக் கடை டெண்டருக்கு 15 இறைச்சிக் கடை வியாபாரிகள் போட்டியிட்ட நிலையில் மொனராகலை பகிணிகஹவெலயைச் சேர்ந்த ஒரு இறைச்சி கடை வியாபாரியே இத்தொகைக்கு கடையைப் பெற்றுக் கொண்டதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

( எம் எச் எம் சியாஜ், எம் யூ.எம் சனூன்)

கற்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சித்தி பெற்ற 51 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஏ.எம் றிஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம் ஜவாத் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

2023 ஆம் ஆண்டு தரம் 11 வகுப்பு



ஆசிரியர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 9ஏ பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்த மாணவி ஹாரிஸ் பாத்திமா ஹம்னா மற்றும் சிறப்பு சித்திகள் பெற்ற மேலும் 15 மாணவர்கள் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன மேலும் உயர்தரத்திற்கு தகுதி பெற்ற 35 மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

# பிரிவினை வேண்டாம்.நாட்டை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்

## தே.ம.ச குருநாகல் வேட்பாளர் அஸ்லம் அழைப்பு

(இக்பால் அலி)

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல் சிங்கள அரசியல், தமிழ் அரசியல் என்று எங்களுக்கிடையே பிரிவினைவாத அரசியல் தேவையில்லை. இந்த நாடு பிரிவினைவாத அரசியலால் வேறுபட்டு 76 வருடங்கள் குட்டிச் சுவராக்கப்பட்டுள்ளதை நாங்கள் காண்கிறோம்.

எனவே இந்த நாட்டின் பாதுகாப்பையும் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு நாங்கள் இன மத பேதமின்றி தேசிய மக்கள் சக்தியின் வேலைத் திட்டத்துடன் நாங்களும் இணைந்து கொள்வோம்



அவ்வாறு இணையும் போதுதான் ஒரு அழகான நாட்டையும் எமக்கு உகந்த அழகான சூழலை உருவாக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



அனுராதபுரம் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் (சிலிண்டர் சின்னத்தில்) பாராளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேட்பாளர் அல்ஹாஜ் இஷாக் ரஹ்மான் தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். ( எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# வரலாற்று வெற்றி காணும் தேசிய மக்கள் சக்தி

## வேட்பாளர் அரூஸ் அஸாத் நம்பிக்கை

(பேருவளை பீ.எம்.முக்தார்)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வரலாறு காணாத வெற்றியை பெற்றுக் கொடுப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது என களுத்துறை மாவட்ட வேட்பாளர் முன்னாள் பேருவளை நகர சபை உறுப்பினர் அஷ்ரூஸ் அஸாத் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யார் என்ன சொன்னாலும் எவர் எதைச் செய்தாலும் நாட்டு மக்கள் இத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்து சக்தி மிக்க அரசாங்கம் ஒன்றை அமைக்க முடிவு செய்து விட்டதாகவும் அந்த முடிவில் மாற்றமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்..

இம்முறை தேர்தலில் களுத்துரை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ



தலைமையில் சிறந்ததொரு குழு போட்டியிடுகிறது.

களுத்துறை மாவட்ட மக்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் சகோதரர் அனுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்காக வாக்களித்து பெரும் பங்களிப்பை வழங்கினர். அதற்காக நன்றி கூறுகிறேன்.

இந்த மாவட்ட மக்கள் இன,மத, கட்சி,மொழி பேதமின்றி தேசிய மக்கள் சக்தி மீதும் அதன் கொள்கை மீதும் சகோதரர் அனுத குமார திஸ ாநாயக்க மீதும் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்து ஜனாதிபதி தேர்தலில் தெளிவான ஆணையைப் பெற்றுத் தந்தனர்.

இன்று தேசிய மக்கள் சக்தி மூலம் போட்டியிட்ட வேட்பாளரே ஜனாதிபதி கதிரையில் உள்ளார். அவருடன் ஒத்துப்போகக்கூடிய பாராளுமன்றத்தையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்றும் களுத்துறை மாவட்டத்தில் குறைந்தது 8 பாராளுமன்ற உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தி இம்முறை பெற்று வரலாறு படைக்கும் என்றும் வேட்பாளர் அஷ்ரூஸ் அஸாத் தெரிவித்தார்.

# அகில இலங்கை ரீதியிலான கவிதைப் போட்டியில் வெற்றியாளர் கம்மல்துறை ஷரான்!

(எம்.ஜே.எம்.தாஜுதீன்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பலகத்துறை கலை இலக்கிய வட்டம் மற்றும் நீர்கொழும்பு CASUAL - LOOK ஆடையகம் இணைந்து அகில இலங்கை மட்டத்தில் நடாத்திய 'கவிதை புனைவோம்' போட்டியில் கம்மல்துறை எம்.எல். ஷரான் முதலிடம் பெற்று 10,000/= ரூபா பணப் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.




"நாளைய விடியலின் நம்பிக்கை விதைகள்" என்ற தலைப்பில் போட்டி நடத்தப்பட்டது. வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன், பலகத்துறை கலை இலக்கிய வட்டக் கவிஞர் கம்மல்துறை இக்பால், கவிஞர் ஏ.எல்.எம். சல்மான் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர். நீர்கொழும்பில் இயங்கும் CASUAL-LOOK ஆடையகம் கவிஞர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்; அரசுக்கு பின்னடைவாகுமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக 2024.10.19 ஆம் திகதி தெற்கின் தங்காலையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும் போது உறுதி வழங்கி இருக்கின்றார். ஜனாதிபதியாக அவர் பதவி ஏற்று ஒரு மாத காலமாகின்ற நிலையில் முழுமையான ஆட்சி கிடைப்பதற்காக பாராளுமன்ற தேர்தலுக்கான பிரச்சார பணிகளை ஆரம்பித்து வைத்து பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்திற்கு கிடைத்த செல்வாக்கும் மக்கள் ஆதரவும் சரிந்து வருகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் ஜனாதிபதி இவ்வாறு மக்களுக்கு கொடுப்பதற்கு திட்டமிட்டிருக்கின்ற சலுகைகள் பற்றி அறிவித்திருக்கின்றார்.

எது எவ்வாறானாலும் என்.பி.பி. க்கு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த மக்கள் ஆதரவை விட அதிகப்படியான ஆதரவு இந்த தேர்தலில் கிடைக்கும் என்று ஜனாதிபதியும் அவரது மூன்றுபேர் கொண்ட அமைச்சரவையும் எதிர்பார்க்கின்றது. ஆனாலும் அநுரகுமார திசாநாயக்கா ஜனாதிபதியாகிய பின்னர் நாட்டில் முட்டை விலை, எரிபொருள் விலைகள் குறைவடைந்தன. முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதாக கூறப்பட்ட சில அதிகப்படியான செலவினம் கட்டுப்படுத்தப்பட்டு வீன் விரயம் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதனை பார்த்த மக்கள் ஆரவாரம் செய்து நல்லது நடக்கும் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். ஆனாலும் 35 ரூபாவாக குறைவடைந்திருந்த முட்டை மீண்டும் ஒரு வாரத்தில் 50 ரூபா வரையில் உயர்வடைந்தது. அத்துடன் எரிபொருள் விலை குறைப்பானது ஏற்கனவே ஆமலில் இருக்கின்ற விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் குறைவடைந்ததாகும்.

மக்ள எதிர்பார்த்த அளவிற்கு வாழ்க்கை செலவு உயர்வை குறைக்கும் அளவிற்கு அரசாங்கத்தால் இதுவரையில் எதையும் செய்ய முடியவில்லை. ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு ஜனவரியில் இருந்து 25 வீதத்தில் இருந்து 50 வீதம் வரையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். ஆனாலும் அவ்வாறான சம்பள அதிகரிப்பொன்றை செய்வதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் திறைசேரி மூலம் செய்யப்பட்டில்லை என்றும் இந்த அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அப்படியானால் ரனில் தேர்தலில் வாக்குகளை பெறுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதாக சொல்ல மக்களை ஏமாற்றி இருப்பது தெளிவாகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் தான் அரசாங்கத்திற்கான மக்கள் ஆதரவு குறித்த கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதனால் அரசாங்கமும் முன்னெடுக்கப் படுகின்ற தேர்தல் பிரசாசரங்களில் மக்களின் ஊள்ளங்களை தொடும் வகையில் எதையாவது சொல்ல வேுண்டி இருக்கின்றது. வெறுமனே ஊழல் இல்லாத ஆட்சி பற்றியும் திருடர்களை கண்டு பிடிப்பதாகவும் மாத்திரம் கூறி வந்தால் மக்களின் வயிறு நிரம்பாது. ஏற்கனவே இரண்டு வருடங்களாக மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார சுமைக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வு பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டி இருக்கின்றது.

அதே நேரம் இந்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. க்கு மக்கள் ஆதரவு கிடைக்காமல் 113 ஆசன பலத்தை பெற்று ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்படுமானால் ஐக்கிய மக்கள் அதிகப்படியான ஆசனங்களை பெற்று ஆட்சி அமைக்க அல்லது ஆட்சியில் பங்காளராகும் வாய்ப்ப கிடைக்குமானால் அரசுக்கு ஆதரவு வழங்கி ஒத்துழைக்க தயாராக இருப்பதாக சமகி ஜனபலவேகய கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசா அறிவித்திருக்கின்றார். 2024.10.19 ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் 113 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைப்பதற்கான அரசியல் கட்சிகளின் ஓட்டமும் கடுமையான போட்டியும் ஆரம்பமாகி இருக்கின்றன. பிரதான கட்சிகளான முன்னைய எதிர்க்கட்சியாக இருந்த சமகி ஜனபலவேகய, பொதுஜன பெரமுன, ஜே.வி.பி, புதிய ஜனநாயக முன்னணி, சர்வஜன அதிகாரம் ஆகிய கட்சிகள் மும்முரமான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. இம்முறை தேர்தல் பிரச்சாரங்களில் முக்கியத்துவம் பெறுவது மரபு ரீதியான முறைகளை விட புதிய வியூகங்களின் அடிப்படையிலான சமூக ஊடகங்களை மையப்படுத்திய பிரச்சார முறையாகும்.

அதனால் இயன்றவரையில் நேரடியாக மக்களை சந்திப்பதையும் பிரச்சாரத்திற்காக கூட்டங்களை நடத்துவதையும் தவிர்த்து மக்களை நேரடியாக சென்றடையும் வகையில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பற்றிய தகவல்கள், அவர்களது கடந்த கால சேவைகள், எதிர்காலத்தில் என்ன செய்ய திட்டங்களை கைவசம் வைத்துள்ளன என்பன அடங்கிய தகவல்கள் பரிமாறப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறாயினும் பிரதான அரசியல் கட்சிகளான சஜித் தலைமை யிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் தேர்தலில் 113 ஆசனங்களை பெற்று அடுத்த பாராளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றும் என்று அதன் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார். 2024.10.17 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சமகி ஜனபலவேகய கட்சியின் முக்கிய பிரமுகர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியான என்.பி.பி. கட்சிக்கு மக்கள் ஆதரவளித்தால் அதன் செல்வாக்கு மேலோங்கி அநுரகுமார திசாநாயக்கா ஜனாதிபதியாக வரும் வாய்ப்பு கிட்டியது. ஆனாலும் அந்த கட்சி அதிகப்படியான வாக்குகளை பெற்று ஆட்சியை பிடிக்கும் வகையில் ஜனாதிபதி தெரிவாகினாலும் இன்றைக்கு சரியாக ஒருமாதம் ஆகின்ற நிலையில் அதன் செல்வாக்கு சரிந்து வருவதாக சஜித் பிரேமதாசா தெரிவிக்கின்றார். ஏற்கனவே ஜே.வி.பி யான தேசிய மக்கள் சக்தி நாடு கடன் சுமையால் பரிதவிக்கின்றது, அதனால் நாட்டை கடன் பளுவில் இருந்து மீட்டெடுக்க வேண்டும், கடந்த 75 வருட கால ஆட்சியாளர்களின் மோசமான ஆட்சி காரணமாகவே இந்தளவிற்கு கடன் சுமைக்குள் தள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தி 2019 ஆம் அண்டில் இருந்து பிரச்சாரங்களை செய்து வந்திருக்கின்றது. அதனால் நாட்டை கடன் சுமையில் இருந்து மீட்டெடுப்பார்கள் என்ற அடிப்படையில் மக்கள் நம்பி வாக்களித்தாலும் இப்போது மக்களுக்கு பலத்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரோஹிணி கவிரத்ன குற்றம் சுமத்தி இருக்கின்றார்.

அவரின் கூற்றுப்படி இந்த அரசாங்கம் பதவியை பொறுப்பேற்ற 13 நாட்களுக்குள் 41,900 கோடி ரூபா உள்ளூர் மூலங்களில் இருந்து கடன் பெறப்பட்டிருக்கின்றது. இந்த கடன் பிணை முறிகளை ஏலத்தில் விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்டி ருக்கின்றது. ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி 14,200 கோடி ரூபாவும் ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி 8,500 கோடி ரூபாவும் அதே மாதம் 11ஆம் திகதி 9,500 கோடி ரூபாவும் 15 ஆம் திகதி 9,700 கோடி ரூபாவும் என்ற அடிப்படையில் பிணை முறி ஏலம் மூலம் கடன் பெற்றிருக்கின்றது என்ற விடயம் பகிரங்கப்படுத்த ப்பட்டிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிய மாட்டோம் என்று கூறிவந்த இதே ஜே.வி.பி. யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கா இலங்கை வந்த நாணய நிதியத்தின் அதிகாரிகளிடம் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்தோ அவற்றை மீளாய்வு செய்து மாற்றியமைப்பது தொடர்பாகவோ எதனையும் பேசவில்லை என்றும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. அத்துடன் இலங்கை வந்து ஜனாதிபதியை சந்தித்த உலக வங்கியின் அதிகாரிகள் 20 கோடி அமெரிக்க டாலர்களை இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்தனர். இந்த 20 கோடி அமெரிக்கா டாலர்களும் (6000 கோழ) கடனாகவே வழங்கப்படுகின்றன. என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் இதுபற்றி ஜனாதிபதியின் பொருளாதார விவகார மற்றும் நிதி விவகாரங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட ஆலோசகர் அனில் ஜயந்த ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அரசாங்கம் புதிய கடன்கள் எதனையும் பெறவில்லை. ஆனாலும் தற்போதைய நிலையில் நாட்டில் நிலவும் நிதிப்பற்றாக் குறைக்கு தீர்வாகவும் அமைச்சுக்களின் செலவினங்களை சமாளிப்பதற்காகவும் பிணை முறிகளை விற்பனை செய்து உள்ளூர் நிதிச் சந்தையில் இருந்து நிதி சேகரிக்கப்படுகின்றது என்று அறிவித்துள்ளார். அத்துடன் ஏற்கனவே திட்டமிட்டபடி நவம்பர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதால் புதிய அரசாங்கம் பதவி ஏற்றவுடன் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அத்துடன் வரவு செலவுத் திட்டம் 2025 ஜனவரி மாதம் நடுப்பகுதி அளவிலே சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங் களில் இருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ஒட்டு மொத்தமாக அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சியை என்.பி.பி. பிடித்தாலும் அமைச்சுக்களை வரையறை செய்து அவற்றுக்கான இலாக்காக்களைவ ர்த்தமாணி அறிவித்தல் செய்யும் வரையில் செலவினங்கள் பற்றிய சரியான கணிப்பீட்டை செய்ய முடியாததால் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பது ஜனவரி மாதம் வரையில் பின்போடப்பட இருக்கின்றது. ஆனாலும் அதுவரையான காலப்பகுதிக்கு அரச செலவினங்களுக்காக பணம் தேவைப்படுவதால் இவ்வாறு நிதியீட்டம் செய்யவே பிணைமுறிகளை வெளியிட்டு கடன் பெறப்பட்டதாக அரச தரப்பின் நியாயமாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளையும் போக்குகளையும் மக்கள் உண்ணிப்பாக கவனித்து வருவதால் 2024 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதியில் இருந்த திசை காட்டிக்கான ஆதரவும் செல்வாக்கும் படிப்படியாக சரிவடைய ஆரம்பித்திருக்கின்றது என்று கருதப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலையில் 2024.10.17 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தெரிவிக்கையில் நடக்கவிருக்கின்ற பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களை பெறுவதில்லை. அதனால் அவருடைய தலைமையில் அணி திரண்டுள்ள புதிய ஜனநாயக கட்சி கூட்டணிக்கு ஆதரவு வழங்கி அவருடன் முன்னைய அரசாங்க காலத்தில் ஒத்துழைத்த நல்ல அனுபவசாளிகளை மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும் என்று ஆலோசனை முன்வைத் துள்ளார். அத்துடன் அந்த கூட்டணிக்கு ரனில் விக்கிரமசிங்காவே தலைவர் என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுள்ள கடனை மீளச் செலுத்தும் காலக்கெடு 2028 ஆம் ஆண்டில் இருந்து அரம்பிப்பதாகவும் அதற்குள் அரசாங்கம் வெளிநாட்டு சிறப்பெடுப்பு ஒதுக்காக (எஸ்.டி.ஆர்) 1400 கோடி ஐக்கிய அமெரிக்க டாலர்களை திரட்டி இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையிலான பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடைய வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டில் இருந்து இந்த அரசாங்கம் மீற முடியாது என்ற விடயத்தையும் முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா வலியுறுத்தி உள்ளார்.

அதுமட்டுமல்லாமல் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வின் வழி நடத்தலிலான மொட்டு கட்சி 113 ஆசனங்களை பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும். ஆமைச்சரவையும் பிரதமர் பதவியும் அக்கட்சிக்கே சொந்தமாக மாறும். அதற்காக மக்கள் அணிதிரண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான பின்னடைவை கண்ட மொட்டு கட்சி மீண்டெழுந்து 113 ஆசனங்களை கைப்பற்றும் என்று கூறி இருக்கின்ற விடயம் வியப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. ஆனாலும் இந்த தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடாத நிலை ஏற்பட்டமையானது அரசியல் வரலாற்றில் புதிய திருப்புமுனை என்றே கூற வேண்டும். இவ்வாறான ஒரு நிலையில் மீண்டும் ராஜபக்ஷ நாமம் நிலைக்க அந்த குடும்ப அரசியல் புத்துயிர் பெற வாய்ப்பில்லை.

அதே நேரம் தற்போது அதிகாரத்தை கைப்பற்றி இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியான ஜே.வி.பி. இந்த தேர்தலில் எப்படியும் 125 ஆசனங்களுக்கு மேல் பெற்று பாராளுமன்ற அதிகாரத்துடன் ஒரு பலமான ஸ்தீரமான ஆட்சியை அமைப்போம் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றது. அதன்கான தேர்தல் பிரச்சார வியூகங்களை வகுத்து மாவட்டங்கள் தோறும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கிடையில் 2019 உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் தொடர்பான விவகாரத்தை கூடுதலாக பேச ஆரம்பித்திருக்கின்றது. கிரிஸ்தவர் களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதானமானது உயிர்த்த ஞாயிறு விசாரணைகளுக்கு புத்துயிர் வழங்கி புதிய கோணத்தில் விசாரணைகளை நடத்தி உண்மையை கண்டுபிடிப்பது என்பதாகும். ஆனாலும் உண்மை எங்கிருக்கின்றது? எவ்வாறு எந்த முணையில் இருந்து விசாரணைகளை ஆரம்பிப்பது என்ற விடயத்தில் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே இந்த தாக்குதலோடு சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கைளில் பெயர் சொல்லப்பட்ட ஒரு சில அதிகாரிகளை இந்த அரசாங்கம் பதவிகளை வழங்கி அதன் தேவைக்கு ஏற்ப கடமைகளில் ஈடுபடுத்தி இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தோடு சம்பந்தப்படும் வகையில் இரண்டு விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவிடம் இருப்பதாகவும் அந்த அறிக்கைகளை ஜனாதிபதி வெளியிட வேண்டும் என்றும் சர்வஜன பலய கட்சியின் வேட்பாளர் மற்றும் பிவிதுரு ஹெலஉருமய கட்சியின் தலைவருமான உதய கம்மம்பிள்ளை சவால் விட்டிருக்கின்றார். ஆனாலும் இந்த அறிக்கைகள் முற்றிலும் இரகசியமான அறிக்கைகள் என்றும் அவை எவ்வாறு கம்மம்பிள்ளையின் கைகளுக்கு கிடைத்தன, அவை தேசிய பாதுகாப்பு இரகசியங் களாகும் என்பதால் அவற்றை தனிநபர்கள் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.

ஆனாலும் ஏற்கனவே அநுரகுமார திசாநாயக்கா அதிகாரம் கிடைப்பதற்கு முன்னர் இந்த அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்று கூறி வந்த போதும் இப்போது ஜனாதிபதியாகிய பின்னர் அந்த அறிக்கைகளை மறைத்து அதில் இருக்கும் உண்மைகளை வெளியிடமல் இருப்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்து வருவதாக கம்மம்பிள்ளை குற்றம் சாட்டி இருக்கின்றார். இந்த அறிக்கையானது 2019 ஏப்ரிலில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பாக புலனாய்வுத் துறையால் விசாரணை நடத்தப்பட்டு விபரங்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும் இதில் பாதுகாப்புத் துறையோடு சம்பந்தப்படுத் ஏராளமான தகவல்கள் உள்ளன என்பதால் உள்ளக இரகசியமான அறிக்கை எவ்வாறு வெளியில் கசிந்தது என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும். அதனால் அரச இரகசியத்தை திருடி அல்லது பெற்று அதனை வைத்திருப்வரை பாதுகாப்பு சட்டங்களின் அரச இரகசிய பாதுகாப்பு பிரிவின் அடிப்படையில்



தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

**அரசியல்...**
(10ம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்து தண்டனை வழங்க முடியும் என்று விஜித ஹேரத் அறிவித்திருப்பதால் சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது.

இருந்தாலும் ஐ.எம். இமாம் அறிக்கை என்று கூறப்படுகின்ற இந்த அறிக்கை யானது 2024 ஜுலை மாதம் 25 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரனில் விக்கிரமசிங்காவுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் அதனை மூன்று மாதங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வைத்திருந்துள்ளார். அத்துடன் அநுரகுமார திசாநாயக்காவுக்கும் அதே அறிக்கை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவோம் என்று கூறி வரும் அரசாங்கம் இந்த அறிக்கையை மறைத்து விசாரணைகளின் உண்மையான போக்கை திசை திருப்ப முயற்சி எடுப்பதாக கம்மம்பிள்ளை குற்றம் சுமத்தி வருகின்றார். எவ்வாறாயினும் அரசாங்கம் இந்த அறிக்கையை வெளிப்படுத்த தவறுமானால் 2024 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி தமக்கு கிடைத்துள்ள இந்த அறிக்கையின் பாதுகாப்பு இரகசியங்களை தவிர்த்து ஏனைய பகுதிகளை வெளியிடுவேன் என்று கம்ம்மபிள்ளை அரசாங்கத்தை மிரட்டி இருக்கின்றார். எதுவானாலும் அரசாங்கம் இந்த தேர்தலையும் எப்படியாவது வெற்றிபெறுவதற்காக உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்தி குற்றவாளிகளை கண்டு பிடிப்போம் என்று கூறி இருக்கின்ற நிலையில் அரசாங்கத்தை மேலும் நெருக்கடிக்குகுள் தள்ளுவதற்காக வெளிப்படுத்தக் கூடாது என்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள அரச பாதுகாப்பு இரகசியங்களை உள்ளடக்கிய அறிக்கையை வெளியிட வேண்டும் என்று புதிய சர்ச்சை கிளப்பப்பட்டு இருப்பதானது தேர்தல் அரங்கில் புதிய பேசுபொருளாக மாறி இருக்கின்றது.

# இலங்கையில் புதிதாக அறிமுகமாகியுள்ள கடவுச்சீட்டு

*இலங்கையில் 21.10.2024 இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கடவுச்சீட்டுக்களின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.*

*இராஜதந்திர கடவுச்சீட்டு, உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு மற்றும் சாதாரண கடவுச்சீட்டுக்கள் மூன்று வெவ்வேறு வர்ணங்களில் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*இதில் சாதாரண கடவுச்சீட்டு கருமைநிறம் புலப்படக்கூடிய வகையில் கருநீல நிறத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*கடவுச்சீட்டில் கீழ்வரும் அம்சங்கள் பாதுகாப்பு அம்சங்களுடன் புறவூதாக் கதிர்களில் ஒளிரக்கூடியவகையில் அச்சிடப்பட்டுள்ளன.*




*4-5 ம் பக்கத்தில் தலதாமாளிகை*
*6-7 ம் பக்கத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில்*
*8 ம் பக்கத்தில் கொழும்பு புனித லூசியா தேவாலயம்*
*9 ம் பக்கத்தில் கொழும்பு பெரிய பள்ளிவாசல்*
*10-11 ம் பக்கத்தில் அம்பாறை சேனாநாயக்க சமுத்திரம்*
*12-13 ம் பக்கத்தில் அனுரதபுர ரூவன்வெலிசாய மகா விகாரை*
*14-15 ம் பக்கத்தில் பதுளை ஒன்பது வில் பாலம்*
*16-17 ம் பக்கத்தில் மட்டக்களப்பு வாவி*
*18-19 ம் பக்கத்தில் கொழும்பு தாமரைக் கோபுரம்*
*20-21 ம் பக்கத்தில் காலி கோட்டை*
*22-23 ம் பக்கத்தில் கம்பகா இறப்பர் தோட்டம்*
*24-25 ம் பக்கத்தில் ஹம்பாந்தோட்டை உப்பளம்*
*26-27 ம் பக்கத்தில் களுத்துறை ஞுவுஜடுவு மீனவர்கள்*
*28 ம் பக்கத்தில் பின்னவல யானைகள் சரணாலயம்*
*29 ம் பக்கத்தில் கிளிநொச்சி அடையாளமாக இலங்கை சாம்பல் இருவாச்சி பறவை*
*30 ம் பக்கத்தில் குருநாகல் யாப்பகூவா குன்றுகள்*
*31 ம் பக்கத்தில் தலைமன்னார் படகுத்துறை*
*32-33 ம் பக்கத்தில் சிகிரியா குன்று*
*34 ம் பக்கத்தில் மாத்தறை வெளிச்சவீடு*
*35 ம் பக்கத்தில் யால தேசிய பூங்கா*
*36 ம் பக்கத்தில் முல்லைத்தீவு கொக்கிலாய் பறவைகள் சரணாலயம்*
*37 ம் பக்கத்தில் நுவரெலியா தேயிலை தோட்டம்*
*38-39 ம் பக்கத்தில் பொலநறுவை பழமை நகரம்*
*40-41 ம் பக்கத்தில் புத்தளம் டொல்பின் காட்சிக்காணல்*
*42-43 ம் பக்கத்தில் சிவனொளிபாதமலை*
*44 ம் பக்கத்தில் திருகோணமலை புறாத்தீவு*
*45 ம் பக்கத்தில் வவுனியா அரிசி அறுவடை*
*என்பன அச்சிடப்பட்டுள்ளன.*

## வாசிப்பீரகை! 11



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பு ஆன்மாவை போசிக்கும் மிகப்பெரும் வணக்கம்

வாசிப்பு எப்பொழுதும் ஆன்மாவை செழுமைப்படுத்திக் கொண்டே இருக்கும்.

ஆன்மாவின் மேம்பாட்டுக்கும் செல்லுமைக்கும் முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் வாசிப்பு அதிகூடிய பங்களிப்பை செய்து வருவது ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்ட ஒன்று.

வாசிப்பு ஒரு சிகிச்சை முறையாக இருந்து சிந்தனையையும் ஆன்மாவையும் ஒன்றிணைத்து பலப்படுத்துகின்றது.

இவ எல்லாவற்றையும் தாண்டி அது ஒரு வணக்கமாக இருக்கின்றது வாசிப்பை தூண்டுவதற்கு இறைவன் தனது திருமறையிலே அதனை முதல் போதனையாக அமைத்து இருப்பதோடு திருமறையை ஒரு புத்தகமாக சொல்கின்ற சந்தேகங்கள் சிக்கல்கள் குறைபாடுகள் அற்ற ஒரு புத்தகம் அது எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டு இருக்கின்றது அதன் ஒவ்வொரு எழுத்துக்கும் பிரத்தியேக நன்மை கிடைக்கின்றது அதனை ஓதுவது அருள் நிறைந்தது அது ஒவ்வொரு எழுத்திலும் இறைவன் ஆங்காங்கே அவ்வப்போது சத்தியமிட்டு அதன் மகிமையை உறுதிப்படுத்துகின்றான்.

வாசிப்பை படைத்த இறைவனோடு இணைத்து அவனை நினைவு படுத்தி வசிக்குமாறு சொல்கின்றான்

ஆக அதுவே முதல் வணக்கம்.
அது நாகரிக உருவாக்கத்தின் முதற்படி
வாசிப்பு ஒரு வணக்கம்
இறை வணக்கம்.

வாசிப்பதன் வழியாக சிந்தனையை பிரயோகித்து இறைவனை அறிந்து கொண்டவர்கள் உணர்ந்து கொண்டவர்கள் அவனை நெருங்கிய அவனது பிரமாண்டத்தை அறிந்து அவனை அஞ்சி நடப்பார்கள்.

வாசிப்பு ஒரு வழிபாடு
வாசிப்பு ஒரு சிகிச்சை முறை
வாசிப்பு ஒரு வாழ்வியல்
வாசிப்பு ஓர் அனுபவம்
வாசிப்பு ஒரு தவம்
வாசிப்பு உன்மத்தம் பிடித்த ஒரு பித்துநிலை
வாசிப்பு ஒரு கலை

மனித வாழ்வு இந்த பூமியில்தான் நிலைத்து நிற்கும். மனிதன் இந்த பூமியை மிகவும் சிறப்பாக வளப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளான். மனிதன் இந்த பூமியில் இறைவனின் பிரதிநிதியாக படைக்கப்பட்டுள்ளான். அல்லாஹ்வை வணங்குவது அவனது தலையாய பணி.

அல்லாஹ் அவனை நோக்கி பேசிய முதலாவது கட்டளை “வாசி” என்பதுதான். வாசிப்பதால் தான் அவனது சிந்தனை விரிகின்றது. ஆன்மா அசைகின்றது. அதனால்தான் அவனால் பூமியை வளப்படுத்தவும் வணக்கத்தில் உயிரோட்டமாய் லயிக்கவும் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும் இருந்து உலகாளவும் முடிகிறது.

ஆன்மா செழுமைபெற அடியான் வாசிக்க வேண்டும். வாசிப்பு அவனது சிந்தனைக்கான தீனியாகிறது. வாசிப்புக்கு எழுத்து அச்சாணியாக உள்ளதால் எழுத்தின் மீதான சத்தியம் அல்குர்ஆன் எங்கும் விரவிக்கிடக்கிறது. மனித வாழ்வில் மொழியும் எழுத்தும் வாசிப்பும் படைத்த இறைவனின் வல்லமையை உணர்த்திக்கொண்டே இருக்கிறது. மொழியின் பன்மைத்தன்மை அருள் நிறைந்தது. எனவேதான் அல்லாஹ் அவனது வேதங்களை வித்தியாசமான நான்கு மொழியில் அருளியுள்ளான்.

எல்லாத் தூதர்களும் அவரவர் சமூகத்துக்கு அந்தந்த மொழியிலே வாழ்வு குறித்து போதித்தனர். எனவே அந்தந்த மொழி குறித்து நாம் புலமை பெற்றிருக்க வேண்டும். அந்தப்புலமையை உருவாக்கும் பிரதான நுழைவாயில் அந்த மொழியினூடான வாசிப்பாகும். வாசிப்பு என்பது வணக்கம். அதற்கு எல்லையோ நிபந்தனைகளோ இல்லை. ஆனால் அது இறுதி மூச்சுவரை தொடர வேண்டும்.

எனவே தான் இறுதி வரை உலகில் உயிர் வாழ உள்ள இறைவேதத்தை அல்லாஹ் நூல் என்கிறான். அதன் ஒவ்வொரு எழுத்தும் உச்சரிக்கப்படுகையில் நன்மை எழுதப்படும் என்கிறான்.

அல்குர்ஆன் மனித சிந்தனைக்கு அழைப்பு விடுக்கிறது. அவனது அவதானத்தை கூர்மையாக்கிறது. காலமாற்றத்துக்கு ஏற்ப அல்குர்ஆன் புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் அவனுக்கு வழங்குவதனூடாக தன்னை தன் இருப்பை தக்கவைக்கிறது. எனவே அது வாசிக்கப்பட வேண்டும் என்கிறது. மனிதன் பகுத்தறிவு மிக்க விலங்கு.

அவன் தனது அறிவை விசாலிக்க வாசிப்பு மட்டுமே மகத்தான வழிகாட்டுகிறது. வாசிப்பு அவனை வழிநடாத்துகிறது. வடிவமைக்கிறது. வாசிப்பின் மூலமாக அவன் சிந்திக்க ஆரம்பிப்பான். கருத்துக்கூறவும், வினாத்தொடுக்கவும் விடயங்களை அலசி ஆராயவும் முற்படுகின்றான்.

வாசிப்பு நாகரீகத்துக்கு அத்திவாரமிடுகிறது. அறியாமையை அகற்றுகிறது. ஆன்மாவை உசுப்புகிறது. சிந்தனையை கிளறி விடுகிறது. அவனை செதுக்கி விடுகிறது. வாசிப்பு என்பதை ஒடுங்கிய வட்டத்தில் அடைத்து விடாது அதன் விசாலமான அகன்ற கருத்தை நோக்கி நாம் நகர வேண்டும்.

ஆழமான வாசிப்பு எம்மில் அவதானத்தை உருவாக்கி விடும். அல்லாஹ்வை நோக்கி அழைத்துசெல்லும்.

அன்றாடம் வாசிப்போம். அல்லாஹ்வை அருகாமைக்கு அழைப்போம்.

# சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தேசிய மக்கள் சக்தியை ஆதரியுங்கள்

## கண்டி வேட்பாளர் பஸ்மின் வேண்டுகோள்



கண்டியில் தேசிய மக்கள் சக்தியில் பாராளுமன்றப் பிரதிநித்தவத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தம் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று கண்டி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஏம். எஸ். எம். பஸ்மின் தெரித்தார்.அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கண்டி நகரில் முஸ்லிம்களுக்கென தனியான ஆண் பாடசாலை இல்லை என்ற குறைபாடு நீண்ட காலமாக இருந்து வருகிறது. முஸ்லிம்கள் செறிவாக வழுகின்ற அக்குறணைப் பிரதேசத்தில் நீண்ட காலமாக வெள்ளப் பிரச்சினை இருந்து வருகிறது. அதற்கென இதுவரையிலும் எந்தவொரு செயற் திட்டமும் மேற்கொள்ளப்பட வில்லை. அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் டிஜிட்டல் தொழில் நுட்ப ரீதியிலான கல்வியினை வழங்குவதற்கான வேலைத் திட்டங்களிலும் ஜனாதிபதி மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றார். அதே போன்று எங்கள் கிராம மட்டத்திலுள்ள பாடசாலையினுடைய அனைத்தும் அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு எத்தனையோ வேலைத் திட்டங்களை கண்டி மாவட்டம் முழுவதும் மேற்கொள் ளப்பட வேண்டியுள்ளன.

இத்தகைய தேவைகளை வளங்களையும் பெற்றுக் கொள்வதற்கு ஆளும் தரப்பில் முஸ்லிம் பிரதிநித்துவம் கட்டாயம் இருத்தல் வேண்டும். அந்த வகையில் கண்டி மாவட்ட முஸ்லிம்களாகிய நீங்கள் இம்முறை உங்கள் வாக்குகளை நிதானமாகச் சிந்தித்து தம் சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு தேசிய மக்கள் சக்தியில் முஸ்லிம் பிரதிநித்துவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

# வியாழன் முதல் சனி வரை கம்பஹா, கொழும்பில் டெங்கு ஒழிப்பு திட்டம்



நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக செய்த கடும் மழை வெள்ளம் காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதால் கொழும்பு கம்பஹாவில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் படி எதிர்வரும் 24,25,26 ஆகிய தினங்களில் இரு மாவட்டங்களையும் சேர்ந்த 22 சுகாதார பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

# பெண்களை பொருளாதாரத்தில் வலுவூட்டுவதே இன்றைய தேவை



**(எம் எச் எம் சியாஜ், எம் யூ.எம் சனூன்)**

நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதமாக காணப்படும் பெண்களை பொருளாதார ரீதியில் பலம் மிக்கவர்க ளாகவும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியவர்களாக வும் வலுவூட்டுதல் இன்றைய அவசியத் தேவையாக உள்ளது என நெப்ஸோவின் கற்பிட்டி இணைப்பாளர் கலாபூஷணம் ஜே. பத்மநாதன் தெரிவித்தார். உலக உணவு தினத்தை (16) முன்னிட்டு பிரஜா அபிலாசை திட்டத்தின் ஊடாக புத்தளம் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் அனுசரணையில் கற்பிட்டி ஆனைவாசல் கிராமத்தில் உள்ள சதா சரன பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவி எஸ். தயாணி ரொசில்டா தலைமையில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் உணவு உற்பத்தியிலும் கவனம் செலுத்தும் வண்ணம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் வகையில் அவர்களுக்கான வீட்டுத்தோட்டம் அமைத்தல் தொடர்பான பயிற்சிகள் இரசாயனங்கள் அற்ற இயற்கை முறையிலான கிரிமி நாசினிகள் மற்றும் கொம்போஸ் பசளை தயாரிப்பு பயிற்சிகளை வழங்கி பெண்களை பலப்படுத்துதல் என்பனவற்றை நோக்கங்களாக கொண்டு எமது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சகல பெண்களுக்கும் வீட்டுத்தோட்டத்திற்கான மரக்கறி விதைகள் வழங்கப்பட்டதுடன் சதா சரன பெண்கள் அமைப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் மேற்கொண்டு வரும் தொழிலாளிகளை வலுவூட்ட உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கஹட்டகஸ்திகிலிய இஹல கங்ஹிடிகம வாவியில் நீராடச் சென்ற இருவர் உயிரிழப்பு

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

கஹட்டகஸ்திகிலிய இஹல கங்ஹிடிகம வாவியில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் இருவரும் மேலும் இருவருடன் மது அருந்திவிட்டு நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொல்கஹவெல மற்றும் பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 24 மற்றும் 34 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கஹட்டகஸ் திகிலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதானையில் முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் பிரதம அதிதியாக கலந்துகொண்ட AMYS ன் பரிசளிப்பு விழா..!




முஸ்லிம் இளைஞர் சங்கம் செய்லான் (ஏ.எம்.வை.எஸ்) என்ற அமைப்பின் தலைவர் தாசீம் மௌலவி தலைமையில்கடந்த 25 வருட காலமாக கல்வி, இளைஞர் தலைமைத்துவம், சுகாதாரம் இயற்கை அனர்த்தம் போன்ற சமுக சேவைகளில் சகல சமுகங்களையும் இணைந்து இவ் அமைப்பு இயங்கிவருகின்றது. இவ் அமைப்பினால் வருடா வருடம் நோன்பு காலத்தில் ஊடகங்களில் நோன்பு காலங்களில் நோன்பு பற்றிய அறிவுகள் சார்ந்த கேள்விகள் ஊடகங்கள் வாயிலாக கேட்கப்படும் இந் நிகழ்வு கடந்த 15 வருட காலமாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் இவ் ஆண்டு யாப்னா முஸ்லிம் மற்றும் இஸ்மாயில் சலபி யு.டியூப் சனல் ஊடாக நோன்பு பற்றிய கேள்விகளுக்கு 1500 பேர்களுக்கும் அதிகமானவர்கள் விடைகளை எழுதி இருந்தனர் அதில் முறையே முதலாம் ,பரிசு 50 ஆயிரம், ரூபாய் இரண்டாம் பரிசு 30 ஆயிரம் ருபா மூன்றாம் பரிசு 20 ஆயிரம் ருபாய், 50க்கும் மேற்பட்டோர்கள் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு மருதானையில் உள்ள அல் ஷபா கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் மௌலவி ஏ.எல். தாசீம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் அவர்களும் கௌரவ அதிதியாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்பின் செயலாளர் அஷ்ஷேக் அர்க்கம் நூர் ஆமித் , சட்டத்தரனி சித்தீக், சட்டத்தரனி லுக்மான் சஹாப்தீன், மற்றும் அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் சாம் நவாஸ் உட்பட அதிதிகளும் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

# வீரத் தியாகிகளின் வரிசையில் யஹ்யா சின்வார் முக்கிய இடத்தை வகிக்கின்றார்

## அவரது படுகொலை தொடர்பில் ஹக்கீம் பலத்த கண்டணம்



ஹமாஸ் இயக்கத்திற்கு தலைமைத் துவம் வழங்கி அண்மையில் சியோனிஸவாதிகளினால் கொலையுண்ட தியாகி இஸ்மாயில் ஹனியேயைத் தொடர்ந்து ,அந்த விடுதலை இயக்கத்திற்கு தலைமை வகித்து,வழிநடாத்திவந்த யஹ்யா சின்வார் அவ்வாறே கொல்லப்பட்ட சம்பவத்தில் அமைதிக்கான நம்பிக்கையை சிதைத்து சின்னாபின்னமாக்கிய இஸ்ரேலை வன்மையாக கண்டிப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இஸ்ரேலியப் படையினரால் ஹமாஸின் தலைவரான யஹ்யா சின்வார் கொல்லப்பட்டது காஸாவில் வியாபித்துவரும் ஈவிரக்கமற்ற கொலைத் தாண்டவத்தின் ஆழ்ந்த கவலையளிக்கும் மற்றொரு தருணமாகும்.

இப்போது ஈரானுக்கும் லெபனானுக்கும் அடுத்தடுத்து இஸ்ரேலால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் போர் நடவடிக்கையின் தீய விளைவாக இது இரத்தம் தோய்ந்த வரலாற்றில் இடம்பெறுகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் கடந்த பல்லாண்டுகளாக அளப்பரிய பங்களிப்பை தொடர்ச்சியாக செய்துவரும் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் போன்றவற்றையும் அவற்றின் ஈடிணையற்ற தலைவர்களையும் நாங்கள் மதிக்கின்றோம்.

பாலஸ்தீனத்தைப் பாதுகாப்பதில் யஹ்யா சின்வாரின் தளராத முயற்சி பொங்கி எழும் போரில் தனது தலைவிதியை நன்குணர்ந்த வீரச் செம்மலின் தீரச் செயலாகும்.

“சின்வார் கொல்லப்பட்ட போதிலும், காஸாவில் போர் முடிவடையவில்லை” என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு மார் தட்டுவது அருவருப்பானது. பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் போன்ற உலக நாட்டுத்தலைவர்கள், “சின்வார் கொல்லப்பட்டது போருக்கு ஒரு திருப்புமுனையைக் கொண்டு வந்து அதனை முடிவுக்கு இட்டுச் செல்லும் “என்று கூறுவதும் கூட கேலிக் கூத்தாகும் .

இத்தனைக்கும் மத்தியில் அமைதிக்கான நம்பிக்கை ஒளிக் கீற்று வெளிப்பட வேண்டுமென நாங்கள் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் இஸ்ரேலின் நாசகார யுத்தக் கெடுபிடிகளை நாங்கள் எப்பொழுதும் போல வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றுள்ளது.



HIV வைரஸ் தொற்று தொடர்பில் அனுராதபுரம் மாவட்ட ஊடகவியலாள ர்களை விளக்கமூட்டும் நிகழ்வு விஜேபுரவில் அமைந்துள்ள சுகாதார பயிற்சி பணிமனையில் (21) நடைபெற்ற போது.

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

## மனநலமும் ஆலோசனையும் 52

# வாழத் தகுதியான வாழ்க்கை

ஒரே ஒருமுறை கிடைப்பது தான் வாழ்க்கை. அது தரமானதாக தகுதியானதாக இருப்பது கட்டாயமாகும்.

வாழ்க்கையில் சந்தோசமாக வாழவேண்டும் என்பதற்காக எதை எதையெல்லாமோ செய்கிறோம். எவ்வளவோ அர்ப்பணிப்புகள் மேற்கொள்கிறோம்.

ஆனால் “நாம் வாழத் தகுதியான வாழ்க்கையை வாழ்கிறோமா“ என்று எப்போதாவது நினைத்திருக்கிறோமா?

குழந்தை இதயம் போல் வாழும் வாழ்க்கை என்ற ஒரு வாழ்க்கை இருக்கிறது.

அது என்ன வாழ்க்கை?

திறந்த உணர்வுடன் வாழ்வதை,

ஆசை ஆர்வத்துடன் வாழ்வதை,

மகிழ்ச்சியுடன் வாழ்வதை,

கள்ளம் கலப்படமில்லாமல் வாழ்வதை,

தற்போதைய தருணத்தில் வாழ்வதை,

வாழ்வின் பொருள் உணர்ந்து வாழ்வதை குறிக்கும் வாழ்க்கை தான் அது.

குழந்தை போன்ற இதயத்தை வளர்த்து, குழந்தை போல் வாழும் வாழ்க்கை எங்களுக்கு நாங்கள் கொடுக்கும் விலைமதிப்பற்ற பரிசு.

அந்த வாழ்க்கையில் தான் தூய்மை இருக்கும்.

அழகும் ஆரோக்கியமும் இருக்கும்.

நிறைவான வாழ்க்கை கிடைக்கும்.

இந்த வாழ்க்கை தான் மகிழ்ச்சி தந்து, நல்லுறவை வளர்த்து, வளம் பெற வழிவகுக்கும். இந்த வழியில் அமைந்த வாழ்க்கை நாம் சந்திக்கும் ஒவ்வொரு நாளையும் ஒரு சாகசமாக மாற்றிக் கொள்ள வழி காட்டும்.

வாழத் தகுதியான வாழ்க்கை என்பது அன்றாடம் நடக்கும் சிறு சிறு தருணங்களைப் பற்றியது. தினசரிக் காரியங்களை ஆக்கப்பூர்வமாக செய்வதைப் பற்றியது. அது வெற்றியை பற்றியதோ, சாதனைகள் பற்றியதோ அல்ல.

நாம் எதை நோக்கிச் செயல்படுகிறோம் என்பதைப் பற்றியதுமல்ல.

எங்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று மற்றவர் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியதும் அல்ல.

தகுதியான வாழ்க்கை என்பது இந்த நேரத்தில் அழகாக ஆரோக்கியமாக வாழ்வதை குறிக்கும்.

நாம் உயர்வான சிந்தனைகளால் உருவானவர்கள். அதனால் தான் மனிதர்களாக இருக்கிறோம். ஏனைய அனைத்து உயிரினங்களுக்கும் மேலாக எமது இருப்பை உயர்த்த நாம் நமது உயர்ந்த சிந்தனைத் திறனைப் பயன்படுத்தி வாழ்க்கையை வடிவமைக்க கடமைப் பட்டிருக்கிறோம்.

எமது வாழ்க்கை மிகவும் பயனுள்ளதாக,

அர்த்தமுள்ளதாக,

அழகானதாக,

கவர்ச்சியானதாக

இருக்கிறது என்பதையும் அத்துடன் வெற்றியையும் ஆரோக்கியமான மாற்றத்தையும் நோக்கி நகர்ந்து செல்கிறது என்பதையும் உணரக்கூடியதாக இருந்தால் அதுவே வளமான வாழ்க்கையாகும். வாழத் தகுதியான வாழ்க்கையுமாகும்.

தற்போதைய எங்கள் வாழ்க்கை நிலை பற்றி, நாம் வாழும் முறை பற்றி ஆராய்ந்து பார்த்தால்..

நாம் எங்கே இருக்கிறோம்,

நாம் எங்கே மாறவேண்டும்,

எவற்றை அகற்ற வேண்டும்,

எவற்றை வளர்க்க வேண்டும் என்பதை கண்டறியலாம்.

நாம் இருக்கும் இடத்தை புரிந்து, இருக்க வேண்டிய இடத்தை அறிந்து கொண்டால் அழகான மாற்றத்தையும் வெற்றியும் அடையலாம்.

வாழத் தகுதியான வாழ்க்கையில் தான் பயனும், பெறுமதியும், பெருந்தன்மையும் இருக்கும்.

அங்குதான் மகிழ்ச்சியும் மரியாதையும் சரியான நேரத்தில், சரியான இடத்தில் வெளிவரும்.

அங்குதான் நாணயமும் நம்பிக்கையும் ஊற்றெடுக்கும்.

நம் வாழ்க்கையை வெற்றியின் பக்கம் உயர்த்துவதற்கான சூத்திரம், நம் எண்ணங்களை முறையாக பயன்படுத்துவதும், நம்மைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்வதுமாகும். அது எங்கள் வாழ்க்கையை வாழத் தகுதியான வாழ்க்கையாக ஆக்கிவிடும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## மங்கையொளி

பயாஸா பாஸில்



# இப்படி ஒரு கணவன் கிடைத்தால் அவரை நிச்சயம் இழந்து விடாதீர்கள்!

*1) எந்த ஒரு கடும் கோபத்திலும் எல்லை மீறி தகாத வார்த்தைச் சொல்லிவிட்டு வாய் தவறி வந்தது என்றுச் சொல்லமாட்டார்.*

*2) உங்களின் மோசமானச் சமையலையும் சிரித்துக் கொண்டே சாப்பிடுவார்.*

*3) எந்த ஒரு சண்டையிலும் உங்கள் குடும்பத்தாரை இழுத்துப் பேச மாட்டார். ஒவ்வொரு சண்டையின் பின்னும் உங்களை இன்னும் ஆழமாய் நேசிப்பார்.*

*4) மற்றவர் முன் உங்களை விட்டுத் தர மாட்டார்.உங்கள் குறைகளை நிறைகளாக்க முயற்சிப்பார்.*

*5) உங்கள் மனதை ஆழமாய் நேசிப்பதால், எத்தனை அழகான பெண்கள் முன்னும் நீங்கள் மட்டுமே அவர் கண்ணுக்கு அழகாய் தெரிவீர்கள்.*

*6) உங்கள் முகம் சிரிப்பிழந்த நாட்களில், அவரால் அலுவலகத்தில் வேலை செய்ய முடியாது. வேறு எந்த வேலையிலும் கவனம் செல்லாது.*

*7) உங்களை எந்த ஒரு பெண்ணுடனும் ஒப்பிட்டுப் பேச மாட்டார். எந்த ஒரு பெண்ணைப் பற்றியும் உங்களிடம் பேசவும் மாட்டார்.*

*8) உங்களை தொலைவில் இருந்துப் பார்த்தேனும் ரசிக்க தவமிருப்பார். உங்கள் மௌனங்கள் அனைத்தையும் அழகாய் மொழி பெயர்ப்பார்.*


*9) அவர் குடும்பத்தில் அனைவருக்கும் பிடித்த பெண்ணாய் உங்களை மாற்றிடுவார். எல்லாருக்கும் ஏற்றார் போல் நீங்கள் நடந்துக் கொள்ள உதவுவார்.*

*10) உங்களை வேலைக்காரியாய், சமையல்காரியாய் பார்ப்பதை விட்டு, குழந்தையாய், தோழியாய், தாரமாய், பார்ப்பார்.*

*11) ஆத்திரத்தில் திட்டிவிட்டு, உங்கள் அழுகை பார்த்து அதிகம் வருந்துவார். நீங்கள் சிரிக்கும் வரை அவர் சிந்தனை இழந்து நிற்பார்.*

---

# திருமண வாழ்க்கையில் காதல் மட்டும் போதாது!



கணவன்-மனைவி ஒருவரையொருவர் மதிக்க வேண்டும். கோபமாக இருக்கும்போது ஒருபோதும் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளாதீர்கள். பல சமயங்களில், அதிக அன்பு இருந்தபோதிலும், ஒரு சிறிய தவறு உறவில் மிகப்பெரிய விரிசலை ஏற்படுத்திவிடும். இந்த விரிசலில் மூன்றாவது நபரை உள்ளே அனுமதிக்காதீர்கள்.

காதல் எப்போதும் இருக்கிறது என அடிக்கடி வெளிப்படுத்துவதை தவிர்க்காதீர்கள்.

இதனால் இருவருக்கும் இடையில் இடைவெளி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே இருவரும் வெளியில் செல்வது, மனம் திறந்து பேசுவதற்கு எல்லாம் தனிப்பட்ட நேரம் கொடுக்க மறந்துவிடாதீர்கள்.

திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைத்திருந்தாலும், அல்லது பல ஆண்டுகளாக திருமண வாழ்க்கையில் இருந்தாலும் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அக்கறை எப்போதும் குறையக்கூடாது. இது இருவருக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கையை உருவாக்கும்.

பல நேரங்களில், திருமணத்திற்குப் பிறகு, தம்பதிகள் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வது, அசிங்கமான சொற்களை பயன்படுத்துவது எல்லாம் விளையாட்டாக செய்துவிடாதீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவில் பெரிய விரிசலை ஏற்படுத்திவிட வாய்ப்பு இருக்கிறது....

ஒருவரையொருவர் அச்சுறுத்திக் கொள்ளவே கூடாது. வீட்டை விட்டு போகிறேன் உள்ளிட்ட எந்தவொரு விஷயத்தையும் கூறி தன் துணையை அச்சுறுத்தக்கூடாது. இது ஒருகட்டத்தில் ஆபத்தில் முடிய வாய்ப்பு இருக்கிறது..

அன்பு செலுத்துங்கள், எந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என அமர்ந்து பேசுங்கள். நிதானமாக விவாதிக்கும்போது வாழ்க்கை சூழல் அமைதியாக இருக்கும். அழகாகவும் இருக்கும்.

சிறிய விஷயங்களே பெரிய பிரச்சனைகளுக்கு, கடினமான முடிவுகளுக்கு காரணமாக இருக்கின்றன என்பதால் அதனை நினைவில் வைத்து வாழ்க்கையை அழகாக வாழுங்கள்.

பூமியில் வாழும் வாழ்க்கை கொஞ்சம் காலம் தான் அந்த வாழ்க்கையை சந்தோஷமாக வாழுங்கள்.



அரபாத் பஹுர்தீன்

## வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான

# ஆசியக் கிண்ண ரி20 தொடர் ஆப்கானிடம் வீழ்ந்தது இலங்கை

வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ண ரி20 தொடரில் இலங்கை அணி எதிர்கொண்ட முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியிடம் 11 ஓட்டங்களால் தோற்றுப் போனது.

ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஓமானில் ஆரம்பித்துள்ள வளர்ந்துவரும் அணிகளுக்கான ஆசியக் கிண்ண ரி20 தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றுள்ளன. இவ் 8 அணிகளும் குழு ஏ மற்றும் குழு பி என இரு பிரிவுகளாக 4 அணிகள் வீதம் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டமாக இடம்பெறுகின்றன.

இதில் குழு ஏ இல் இலங்கை, ஆப்கானிஸ்தான், ஹொங்கொங் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. குழு பி இல் இந்தியா, பாகிஸ்தான், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

அதற்கமைய குழு ஏ இல் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இலங்கை வளர்ந்துவரும் அணி, ஆப்கானிஸ்தான் வளர்ந்துவரும் அணியை எதிர்கொண்டது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை வளர்ந்துவரும் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான்ஈஈ வளர்ந்துவரும் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சித்தீக்குல்லாஹ் 83 ஓட்டங்களையும், சுபைர் 57 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் அசத்திய துஷான் ஹேமந்த 23 ஓட்டங்களுக்கு 6ஈ விக்கெட்டுகளை அள்ளிக் சுருட்டினார்.

பின்னர் சவால் மிக்க 167 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை வளர்ந்துவரும் அணி 19.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 11 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பாட்டத்தில் நுவணிந்து பெர்ணான்டோ 51 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பந்துவீச்சில் பரிடூன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மேலும் இன்று தமது 2 ஆவது போட்டியில் இலங்கை அணி ஹொங்கொங் அணியை சந்திக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




# ஹெட்ரிக் கோல் அடித்து ரொனால்டேரின் சாதனையை சமன் செய்தார் மெஸ்ஸி

சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டிகளில் 10 ஹெட்ரிக் கோல்களை உட்செலுத்தி கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சாதனையை சமன் செய்தார் ஆர்ஜென்டீனா அணியயின் தலைவரான லயோனல் மெஸ்ஸி.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு அணிகளைத் தேர்வு செய்வதற்கான உலகக் கிண்ண தகுதிப் போட்டியில் நேற்று முன்தினம் நடப்புச் சம்பியனான ஆர்ஜெண்டினா அணி பொலிவியாவுடன் மோதியது. இப்போட்டியில் 6:0 என்ற கோல்கள் கணக்கில் ஆர்ஜென்டீனா அணி அபார வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் ஆர்ஜென்டினா அணியின் தலைவரும் உலக நட்சத்திர வீரருமான லயோனல் மெஸ்ஸ ி 19ஆவது, 84ஆவது மற்றும் 86ஆவது ஆகிய நிமிடங்களில் கோலினை உட்செலுத்தி தனது சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டிகளில் 10ஆவது ஹெட்ரிக் கோலை அடித்து அசத்தினார். மேலும் மற்றைய 2 கோல்கள் அடிக்கவும் மெஸ்ஸி உதவியது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் மற்றுமொரு நட்சத்திர உதைப்பந்தாட்ட வீரரான போர்த்துகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் 10 ஹெட்ரிக் கோல்கள் என்ற சாதனையை சமன் செய்துள்ளார். 37 வயதாகும் மெஸ்ஸி ஆர்ஜெண்டினா அணிக்காக 189 போட்டிகளில் பங்கேற்று 112 கோல்களை அடித்துள்ளார்.

இதனிடையே அப்போட்டியின் பின்னர் மெஸ்ஸி இவ்வாறு குறிப்பிட்டார், “நாட்டுக்காக விளையாடுவது என்பது எப்போது மகிழ்ச்சியான ஒன்று. என்னுடைய பெயரை மக்கள் உச்சரிக்கும்போது நான் மிகவும் நெகிழ்ந்து போனேன். ஆர்ஜெண்டினாவில் விளையாடுவது அனைவருக்கும் பிடித்தமானது. மக்களின் அன்பைப் பகிர்ந்து கொள்வதில் அணியினர் அனைவரும் மகிழ்ச்சி கொள்கிறோம். எனது ஓய்வு குறித்து நான் எதுவும் திட்டமிடவில்லை. நான் மகிழ்ச்சியாக விளையாடுகிறேன்.“ என்று லயோனல் மெஸ்ஸி கூறினார்.



# இலங்கையின் அதிவேக வீரனாக மகுடம் சூடிய கல்பிட்டி நிர்மலமாதா மாணவன் மலித் தருஷன்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் ஆண்களுக்கான 18 வயதிற்குட்பட்ட 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கல்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலய மாணவன் மலித் தருஷன் முதலிடம் பிடித்து வரலாறு படைத்தார்.

கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிகள் இன்று (19) கொழும்பு சுகததாச சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய (19) இடம்பெற்ற 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் வடமேல் மாகாணத்தின் சம்பியனான கல்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலய மாணவன் டபில்யூ. சீ. டீ. மலித் தருஷன் பங்கேற்று தகுதிகாண் போட்டிகளில் முதலிடம் பெற்று, இறுதிப் போட்டிக்குள் தடம் பதித்தார்.

பின்னர் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் போட்டித் தூரத்தை 10.96 செக்கன்களில் நிறைவு செய்து முதலிடம் பெற்றதுடன், தனது அதி சிறந்த நேரப் பெறுபேற்றையும் நிலைநிறுத்தி வரலாறு படைத்தார்.

மேலும் 61 வருட கல்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலய வரலாற்றில் முதல் முறையாக மெய்வல்லுனர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் கிடைக்கின்றமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவ் வெற்றிக்கு துணை நின்ற அப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியை எச். பி.கே. ராஜபக்ஷ மற்றும் அதிபர் சுதர்சன மற்றும் அம் மாணவனின் பெற்றோருக்கும் பாடசாலை சமூகமும், கல்பிட்டி வாழ் மக்களும் தமது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 6ஆவது கரம் உலகக்கிண்ண

## அனுசரணையாளராக இலங்கை கிரிக்கெட்

அடுத்த மாதம் அமெரிக்காவில் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கரம் போட்டியில் பங்கேற்கும் வீரர்களை உள்ளடக்கிய இலங்கை தேசிய கரம் அணியினர் கடந்த 18ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்தனர்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறவுள்ள ஆறாவது கரம் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அணி முகாமையாளருடன் எட்டு விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இந்த சுற்றுப்பயணத்திற்கான முழுமையான அனுசரனையை இலங்கை கிரிக்கட் பொறுப்பேற்றுள்ளதுடன் அதற்காக 5 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது. அதற்கமைய இலங்கை கிரிக்கெட்டின் பொருளாளர் திரு.சுஜீவ கொடலியத்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இந்நிதியுதவியினை வழங்கி வைத்திருந்தார்.

மேலும் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து திரு. ரணில் அபேசிங்க அணி முகாமையாளராகவும், ஆண் வீரர்களான மொஹமட் ஷஹீட், அனஸ் அஹமட், கவீன் நிம்னெத் பீரிஸ், தினேஷ் நிஷாந்த பெர்னாண்டோ, ஆகியோருடன் பெண் வீராங்கனைகளான ஜோசப் ரோஷித வடுகே, ஹிருஷி மல்ஷானி பீரிஸ், தருஷி ஹிமஹன்சிகா வீரசேகர மற்றும் தஸ்மிலா கவிந்தி ஆகியோரும் இவ் உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கின்றனர்.

அத்துடன் இலங்கை கரம் அணியுடன் குழு புகைப்படத்தில் கலந்து கொண்ட பிரதமர், வீரர்களின் வெற்றிக்காக தனது வாழ்த்துகளை தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.